பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 9 வெள்ளிக்கிழமை (25-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:239

## வெளிநாட்டு அமைதிப்படையினை நாட்டுக்குள் அழைக்கத்திட்டமாம்!

### ஜே.வி.பி. தலைவர் சொல்கிறார்!!

லண்டன்,ஜூலை25

வெளிநாட்டு அமைதிப்படை ஒன்றை இலங்கைக்கு அழைக்கும் திட்டம் திட்டப்பட்டுள்ளது என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க லண்டனில் இருந்து குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கையைப் பிரித்து தமிழீழத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இந்த வெளிநாட்டு அமைதிப்படை இலங்கைக்கு வரவழைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

போர் நிறுத்தக் கட்டுப்பாடுகளை விடுதலைப் புலிகள் மீறுவதாகக் கூறி, அதனைக் கண்காணிப்பதற்காக வெளிநாட்டு (14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நாளை ஹர்த்தால்

திருகோணமலை,ஜூலை25

திருகோணமலைப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் யுத்த நிறுத்த மீறல்களைக் கண்டித்து நாளை சனிக்கிழமை அங்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

திருகோணமலை பொது அமைப்புக்களின் ஒன்றியம், மாணவர் அமைப்பு, இளைஞர் அணி மற்றும் மகளிர் அமைப்பு என்பன இணைநது இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

போர் நிறுத்த ஒப்பந்தம் கைச் (14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்தியா இடையில் பாலம் அமைத்தால் புலிகளால் ஆபத்தாம்!

### இந்தியப் பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம்

சென்னை,ஜூலை25

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கடல் மீது பாலம் கட்டப்பட்டால் விடுதலைப் புலிகள் மூலம் தமிழகத்தில் வன்முறைக் கலாசாரம் பரவும என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.

இதனால், அத்திட்டத்தைக் கைவிடக்கோரி பிரதமர் வாஜ்பாய்க்கு ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

மேலும், இலங்கைக் கடற்படையினர் மற்றும் விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் செயல்படும் இலங்கை மீனவர்களின் தாக்குதலிலிருந்து தமிழக மீனவர்களைக் காக்க கச்சதீவை இந்தியா நிரந்தர குத்தகைக்கு எடுக்க வேண்டும் என்றும் ஜெயலலிதா தனது (14ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு:

# இரு வேறு திட்ட வரைவுகளே ஜனாதிபதிக்கும் புலிகளுக்கும்

### அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது

கொழும்பு,ஜூலை25

**வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் வழங்கப்பட்ட வரைவுகள் வித்தியாசமானவை என்பதை அரசு ஒப்புக்கொள்கிறது. அரசு தயாரித்த வரைவின் பிரதி ஒன்று ஜனாதிபதிக்கு உடனடியாக அனுப்பப்பட்டது. நோர்வே அனுசரணையாளரினால் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. திருத்தங்களுடன் நோர்வே அனுசரணையாளர் தயாரித்த வரைவின் பிரதி அவசரமாகப் புலிகளுக்கு அனுப்பப்பட்டது. நடந்தது இதுதான் என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.**

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபொழுதே அமைச்சர் பீரிஸ் இதனை ஒப்புக்கொண்டு விளக்கமளித்தார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசின் ஆலோசனைகளை உள்ளடக்கிய தீர்வுத்திட்டம் நோர்வே அனுசரணையாளர்களினாலேயே தயாரிக்கப்பட்டது. அதில் நோர்வே அனுசரணையாளர்கள் மேற்கொண்ட (14ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கையும் கிழக்கையும் பிரிக்கக் கோரி ஜனாதிபதியிடம் சிங்கள அமைப்பு மகஜர்

வடக்கையும் கிழக்கையும் இணைக்கக்கூடாது; இரண்டு மாகாணங்களையும் தனித்தனியான நிர்வாக அலகுகளுடன் உருவாக்கவேண்டும்.

- இவ்வாறு கோரி தேசிய ஒருங்கிணைப்பு அமைப்பு ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றை நேற்றுக் கையளித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தை வடக்குடன் இணைப்பதால் கிழக்கிலுள்ள சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பாதிப்பு ஏற்படும். இனரீதியான வன்முறைகள் உருவாக அது காரணமாக அமையும் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 1981ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி அங்கு 62 வீதம் தமிழர்களும், 33 வீதம் முஸ்லிம்களும், 25 வீதம் சிங்களவர்களும் வாழ்கின்றனர். 225 சதுர மைல்களைக் கொண்ட கிழக்கு மாகாணம் பல்லின மக்கள் வாழும் ஒரு பிரதேசமாகும்.

வடக்கு-கிழக்கு இணைப்பு, கிழக்கில் வாழும் சிறுபான்மையினருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு செயலாகவே அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மடகொட சுமணதிஸ்ஸ நாயக்க தேரர் தலைமையில் சென்ற குழுவினரே இந்த மகஜரை கையளித்துள்ளனர். (ம-5-6)

## இராணுவத்துக்கு மேலும் 5,000 பேர் திரட்டப்படுவர்!

கொழும்பு,ஜூலை25

இராணுவத்துக்கு மேலும் 5,000 பேர் அடுத்த மாதத்தில் திரட்டப்பட இருக்கின்றனர். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று இராணுவ மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தன தெரிவித்தார் என்று செய்தியொன்று கூறுகின்றது.

இராணுவத்தில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் 17,000 வீர்களுக்கான வெறறிடங்களை நிரப்பவே இந்த ஆள்திரட்டல் நடைபெறவிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

5,000 பேர் புதிதாகத் திரட்டப்பட்ட பின்னர் எஞ்சிய வெற்றிடங்களைக் காலத்துக்குக் காலம் நிரப்பவிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

## யாழ்ப்பாணத்தில் ஜயலத்தை புலிகள் தாக்கிவிட்டார்களாம்!

கொழும்பு,ஜூலை25

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன யாழ்ப்பாணத்தில் வைத்து புலிப் பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டுள்ளார். இதனால், அவரது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதுடன் அவருக்கு அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஜே.வி.பியின் எம்.பியான விமல் விரவன்ச நேற்று நாடாளுமன்றத்தில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

விமல் வீரசன்ச எம்.பி. தொடர்ந்து கூறியதாவது:-

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தாக்கப்பட்டது அமைச்சர் ஒருவருக்கு விடுக்கப்பட்ட பெரும் சவாலாகும். இவ்விடயம் குறித்து எம்.பிக்களின் பாதுகாவலர் என்ற ரீதியில் சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும். (14ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண மட்ட தமிழ்த்தின போட்டி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை25

மாகாண மட்ட தமிழ்மொழித் தின விழாவின் ஆரம்ப நிகழ்வான தமிழ் மொழித் தினப் போட்டிகள் இன்று யாழ்.நகரப் பாடசாலைகளில் ஆரம்பமாக உள்ளன.

போட்டிகள் அனைத்தும் நான்கு பாடசாலைகளில் நடைபெறவுள்ளன. வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறும் போட்டிகளை மாகாணக் கல்விப் பணிப்பாளர் அ.மகாலிங்கம் ஆரம் (14ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் நிரந்தரமாக ஏற்பட்டுவிட்டதானால் யாழ்ப்பாணம் விரைவில் அபிவிருத்தியாகும்

### பிரட்மன் வீரக்கோன் உரை

கொழும்பு,ஜூலை25

இருபது வருடகால யுத்தத்தினால் சீரழிந்த வடபகுதியைப் புனரமைப்பதற்கு அரசு பல திட்டங்களை வகுத்துள்ளது. உலக நாடுகளின் நிதி உதவியுடன் இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது. சமாதானம் நிரந்தரமாக நிலவினால் யாழ்ப்பாணம் விரைவில் அபிவிருத்தியடைந்துவிடும்.

- இவ்வாறு, நேற்று கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற, இவ்வருடத்தில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் அடங்கிய விவரத்திரட்டு நூலைப் பெற்றுக்கொள்ளும் வைபவத்தில் உரையாற்றிய பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, எம்.பிக்களான அ.விநாயகமூர்த்தி, என்.மதனராஜன், ரிசாட் பதியுதீன், யாழ்.அரசாங்க அதிபர் எஸ்.பத்மநாதன், வடபகுதி அரச திணைக்கள உயர் அதிகாரிகள், யாழ். அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் ஜோமன் தொழில்நுட்ப அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்வைபவத்தில் வீரக்கோன் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

## கின்னியா முகாமை அகற்ற விடுதலைப் புலிகள் மறுப்பு!

கொழும்பு,ஜூலை25

கிண்ணியா, குரங்குபாஞ்சானில் விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்டுவரும் முகாமை அகற்றுமாறு கண்காணிப்புக் குழுவினர் விடுத்த கோரிக்கையை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

இந்த முகாம் சர்ச்சை தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கண்காணிப்புக் குழுத் தலைவர் ட்ரிக்வே ரெலிவ்சன் அண்மையில் பேச்சு நடத்தியிருந்தார்.

இதன்போது கிளிநொச்சியிலிருந்து விடுதலைப் புலிகளின் குழுவொன்று கிண்ணியா சென்று முகாம் தொடர்பாக ஆராய்ந்து அதன் பின்னர் (14ஆம் பக்கம் பார்க்க)

அவசரமாக காசு தேவைப்படுகின்றதா ?

இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ரன் சஹன அடகுச்சேவை



NSB

ஒரு தங்க சவரனுக்கு கூடுதலான பணம்

தவணை அடிப்படையில் திரும்ப செலுத்தும் வசதி


இரகசியம் பேணல் மற்றும் துரித சேவை

வருடாந்தம் 17% குறைந்த வட்டி

கணனி மூலம் பரிசோதனை

NSB தேசிய சேமிப்பு வங்கியின் தங்கமான சலுகை

PHOENIX O&M




ஈராக்கின் முன்னாள் ஆட்சியாளர் சதாம் ஹுசைனின் இரு மகன்களும் கடந்த செவ்வாயன்று வடக்கு ஈராக்கின் மோசுல் நகரில் இடம்பெற்ற மோதலில் கொல்லப்பட்டதாக அமெரிக்கப் படையினர் அறிவித்திருந்தனர். உயிரிழந்த உதய் ஹுசைன் (வயது 39) மற்றும் குசே ஹுசைன் (வயது 36) ஆகியோரின் படங்களை அமெரிக்க அதிகாரிகள் நேற்று வெளியிட்டனர். உயிரிழந்த இருவரும் சதாமின் மகன்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இது தொடர்பான செய்தி வெளியிடப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்காவினால் நேற்று வெளியிடப்பட்ட படங்களே இங்கு காணப்படுகின்றன. முதலில் காணப்படுவது உதய் ஹுசைன் உயிருடன் இருந்தபோது எடுக்கப்பட்ட படமும் உயிரிழந்ததாகத் தெரிவித்து அமெரிக்கா வெளியிட்ட படமும். அதேபோன்று அடுத்துள்ளவை குசே ஹுசைனின் படங்கள்.

# கறுப்பு ஜூலை அனர்த்தங்களுக்காக வருத்தம் தெரிவிப்பதால் பயனில்லை

## பீரிஸ் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை25

கறுப்பு ஜூலை அனர்த்தங்கள் அழியாத வடுவை ஏற்படுத்தியுள்ளன. அதற்காகப் பொதுவாக வருத்தம் தெரிவிப்பதாலோ அல்லது மன்னிப்பு கேட்பதாலோ பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த நன்மையும் ஏற்படாது. பாதிப்புக்களை ஈடுசெய்யும் வகையில் உதவுவதன் மூலமே பாதிக்கப்பட்டவர்களை ஓரளவாவது திருப்தியடையச்செய்யமுடியும்.

இப்படிக்கூறினார் அரசியல் விவகார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்.

செய்தியாளர் மாநாட்டில், வெளிநாட்டுச்செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

நாட்டில் இப்போது சமாதானம் நிலவுகின்றது. இப்படியான சூழலில் அரசாங்கம் இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வருத்தம் தெரிவித்து ஒரு செய்தியை வெளியிட்டால் அது பாதிக்கப்பட்ட மக்களுக்கு சற்று ஆறுதலை ஏற்படுத்தும் அல்லவா? என்று அந்த நிருபர் அமைச்சரிடம் வினவினார்.

இக்கேள்விக்குப் பதில் அளித்த அமைச்சர் பீரிஸ், வெறும் வார்த்தைகளினால் எந்த நன்மையும் ஏற்படாது.

ஆக்கபூர்வமான நிரந்தரமான பலன் கிட்டவேண்டும் என்பதே அரசின் நோக்கம். இந்த அடிப்படையிலேயே யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து சமாதானப் பணிகளில் ஈடுபட்டுள்ளோம். இதுவே உண்மையான விமோசனம் என்றார். (ம)

# இத்தாலிக்குக் களவாகச் செல்லவிருந்த மேலும் 163 வெளிநாட்டவர்கள் கைது!

## கல்கிசைப் பகுதியில் தங்கியிருந்தனர்

கொழும்பு,ஜூலை25

இலங்கையிலிருந்து இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்லவிருந்த மேலும் 163 வெளிநாட்டவர்கள் கல்கிசைப் பகுதியிலிருந்து நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

கல்கிசைப் பகுதியிலுள்ள ஹோட்டல்கள்,தங்குமிடங்கள் சிலவற்றில் தங்கியிருந்த வெளிநாட்டவர்களே பொலிஸாரினால் இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை நான்கு மணி முதல் காலை 6மணிவரை கல்கிசைப் பொலிஸார் தேடுதல் நடத்தி அவர்களைக் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்டவர்களில் 75பேர் இந்தியர்கள், 59பேர் பாகிஸ்தானியர்கள், 29 பேர் பங்களாதேஷ்காரர்கள், இருவர் இலங்கையர்கள்.

வெளிநாட்டவர்களுக்கு உதவவே இரு இலங்கையரும் இருந்திருக்கின்றனர் என்றும் வெளிநாட்டவர்கள் குறித்து கிடைத்த தகவலொன்றை அடுத்தே தேடுதல் நடத்தப்பட்டது என்றும் பொலிஸார் கூறினர். (ம)

# பிரதமர் ரணில் ஓக. 8ஆம் திகதி சீனாவுக்கு ஆறு நாள் விஜயம்

## ஐந்து ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும்

கொழும்பு,ஜூலை25

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஓகஸ்ட் முதல்வாரத்தில் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றார். பிரதமரின் இந்த விஜயத்தின் போது பொருளாதார, விவசாய, கைத்தொழில், கிராமிய அபிவிருத்தி, கலாசார அபிவிருத்தி தொடர்பான ஐந்து ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஓகஸ்ட் 8ஆம் திகதிமுதல் 13ஆம் திகதிவரை சீனாவில் விஜயம் மேற்கொள்வார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சீன ஜனாதிபதி, பிரதமர், நிதிஅமைச்சர், வர்த்தக அமைச்சர், தொழில் அமைச்சர் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்துவார்.

இந்த ஒப்பந்தங்கள் இலங்கையில் விவசாய, கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்யவும், சீன முதலீட்டாளர்கள் இங்கு தொழில்களை ஆரம்பிக்கவும் வழிவகுக்கும்.

இலங்கை சீன கூட்டு முயற்சியில் பீஜிங்கில் பாரிய வர்த்தகக் கண்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கண்காட்சி வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அமையும் என்று அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறினார். (ம)

# மின் பாவனையாளரிடம் வட்டி அறவிடும் திட்டம் உடனடியாக இடைநிறுத்தம்

## அமைச்சர் கரு ஜயசூரிய நேற்று பணிப்புரை

கொழும்பு,ஜூலை25

மின்சாரக் கட்டணங்களை, கட்டணப் பட்டியல் கிடைத்து 15 தினங்களுக்குள் செலுத்தத் தவறுவோரிடம 2சதவீத வட்டி அறவிடும் மின்சார சபையின் திட்டம் உடனடியாக இடைநிறுத்தப்பட்டிருக்கிறது.

மின் கட்டணங்களைக் குறிப்பிட்ட காலத்துக்குள் செலுத்தத் தவறும் பாவனையாளர்களிடம் 2சதவீத வட்டி அறவிடப்படும் என்று மின்சாரசபை ஏற்கனவே அறிவித்திருந்தது.

இத்திட்டம் குறித்து ஆராய்ந்த மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கரு ஜயசூரிய, அத்திட்டத்தை இடைநிறுத்தும்படி நேற்றுப் பணிப்புரை விடுத்தார் என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து சித்தமருத்துவபிரிவு பிரிந்துசெல்லாது

## பகிஷ்கரிப்பைக் கைவிடக் கோருகிறார் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,ஜூலை25

யாழ்பல்கலைக்கழகத்தில் இருந்து சித்த மருத்துவப்பிரிவு பிரிந்து செல்லாது. பல்கலை நிர்வாகம் எடுக்கும் நடவடிக்கைகள் இப்பிரிவு தொடர்ந்து பல்கலைக்கழகத்துடன் இணைந்து இருப்பதை உறுதிசெய்யுமே தவிர; ஒருபோதும் பிரிந்து செல்ல இடமளிக்கமாட்டாது. எனவே மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டு விரிவுரைகளுக்குத் திரும்பவேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்.

சித்த மருத்துவத்துறையை தனி நிறுவனமாக்குவதை எதிர்த்து மாணவர்கள் மேற்கொண்டுவரும் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொழும்பு பல்கலைக்கழக உள்நாட்டு மருத்துவ நிறுவனத்தின் ஓர் அங்கமாக இருந்த சித்தமருத்துவப் பிரிவு 1983 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து 1984ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் கீழ் இயங்கும் ஒரு துறையாக இணைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பல பிரச்சினைகளுடன் இயங்கிவந்த சித்த மருத்துவத்துறையை ஒரு நிறுவனமாக்கும் படி யாழ். பல்கலைக்கழக கலைப்பீடமும், மூதவையும், பேரவையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் 1991 ஆம் ஆண்டில் ஏகமனதாகக் கேட்டுக்கொண்டன.

அதற்கான சாதகமான பதில் கிடைக்காமையினால் 1993 ஆம் ஆண்டு முதல் துணைவேந்தரின் நிர்வாகத்தின் கீழ் சித்த மருத்துவத் துறை செயற்பட்டு வருகிறது. அண்மையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்களை சித்தமருத்துவத் துறையின் கல்விசார் நடவடிக்கை மற்றும் நிர்வாகம் தொடர்பாக ஓர் ஆய்வை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கு மாறு பணித்தது.




சித்த மருத்துவத்துறையை பீடமாக்கும்படி கோரி மாணவர்கள் கடந்த 8ஆம் திகதி முதல் மேற்கொண்டுவரும் போராட்டம் நேற்று 17 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்து மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆணைக்குழுவின் பணிப்புரைக்கமைய அவர் யாழ்ப்பாணம் வந்து மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றைய பீடங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள் ஆகியோரைச் சந்தித்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதில் அடங்கியுள்ள சிபார்சுகளுக்கமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் கீழ் சித்த மருத்துவத் துறையை ஒரு நிறுவனமாக தரமுயர்த்துவதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும், அந்த நடவடிக்கை எடுப்பதற்கு நீண்டகாலம் எடுக்கும் பட்சத்தில் தற்காலிகமாக சித்தமருத்துவத்துறையை மீண்டும் கலைப்பீடத்தில் சேர்த்து நிர்வாகத்தை நடத்தும்படியும் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. ஆனால், கலைப்பீடம் தங்கள் கடந்தகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த சிபார்சை ஏற்கவில்லை.

ஆகவே,சித்த மருத்துவத்துறையின் கல்வி, நிர்வாகம் மற்றும் புனரமைப்பு சம்பந்தமாக துணைவேந்தருக்கு சிபார்சு செய்ய ஒரு முகாமைத்துவ சபையை பல்கலைக்கழகம் நியமித்துள்ளது.

இதேவேளை, துணைவேந்தராக நான் பதவி ஏற்றபின் துணைவேந்தரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கிவந்த மீன் பிடியியல், உடற்கல்வி கற்கைநெறிகள்கூட தற்போது பொருத்தமான பீடங்களின் நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆகவே சித்த மருத்துவத் துறையை மட்டும் எனது நேரடி நிர்வாகத்திலிருந்து பிரித்ததாக கருதுவது எவ்வகையிலும் பொருந்துமாகாது. தற்போது அமைக்கப்பட்டுள்ள முகாமைத்துவசபை துணைவேந்தருக்கு தனது சிபார்சுகளை அறிவிக்கும்.

இது தவிர பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவராகிய பேராசிரியர் கே.டி.அருட்பிரகாசம் அவர்களை சித்தமருத்துவ மாணவர்கள் 21.07.2003 அன்று சந்தித்து தங்கள் (13ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கப் படையினர் மூவர் ஈராக்கில் கொல்லப்பட்டனர்

பக்தாத்,ஜூலை25

வடக்கு ஈராக்கில் நேற்று இடம் பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் அமெரிக்கப்படையினர் மூவர் கொல்லப் பட்டனர்.

சதாமின் புதல்வர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் அறிவித்த பின்னர் ஈராக்கில் கொல்லப்பட்ட அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை இத்துடன் 5ஆக உயர்ந்துள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மற்றொரு தாக்குதலில் அமெரிக்கப் படையினர் இருவா கொல்லப்பட்டதுடன், 8பேர் காயமடைந்திருந்தனர்.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப்படையினர் 101ஆவது வான படையணியினர் மீது அடையாளம் தெரியாத குழுவினர் கையெறி குண்டுகள் மற்றும் சிறுரக ஆயுதங்களைக கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும் -

இதில் அமெரிக்கப்படையினர் இருவர் கொல்லப்பட, சிலர் காயமடைந்ததாகவும் -

அமெரிக்க இராணுவப் பேச்சாளர் கோப்ரல் ரொட் புருடன் தெரிவித்தார்.

இந்த அமெரிக்கப் படையணி மேற கொண்ட படை நடவடிக்கையிலேயே சதாமின் இருபுதல்வர்களும் கொல்லப்பட்டிருந்தனர். அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே நேற்றைய தாக்குதல் சம்பவம் கருதப்படுகிறது.

இதற்கிடையில் சதாமின் புதல்வர்கள் கொல்லப்பட்டதைப் பெரும்பாலான ஈராக்கியர்கள் நம்பமறுத்து வருவதாக ஈராக்கியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கில் சதாமின் ஆட்சி மீண்டும் ஏற்படுமென கணிசமான ஈராக்கியர்கள் நம்புவதாகவும் -

அதனால், அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படையினருடனோ அல்லது புதிய நிர்வாகத்துடனோ ஒத்துழைக்க அவர்கள் பின்னடிப்பதாகவும் - கூறப்படுகிறது.

சதாமின் புதல்வர்கள் கொல்லப்பட்டிருந்தாலும்கூட, சதாம் உயிருடன் இருக்கும்வரை அவரது ஆட்சி மீண்டும் ஈராக்கில் உருவாக வாய்ப்புண்டு என்றே பெரும்பாலான ஈராக்கியர்கள் நம்புகின்றனர்.

இந்நிலையில் கொல்லப்பட்டதாகக கூறப்படும் சதாமின் புதல்வர்களது சடலங்களின் புகைப்படங்களை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. (ஒ)



சதாமின் புதல்வர்கள் கொல்லப்பட்ட மாளிகையின் முன்பாக பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப்படையினர்.

# நியூயோர்க் நகரசபையில் உறுப்பினர் சுட்டுக்கொலை



அமெரிக்காவின் நியூயோர்க் நகர மண்டபத்தில் நகரசபை உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். உளளூர் வன்முறைகளை ஒழிக்கும் நடவடிக்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தவரும், புருக்ளின் பகுதியின் நகர மன்ற உறுப்பினருமான ஜேம்ஸ் டேவிட் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். எதிர்வரும் நகரசபைத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட உள்ள ஒதேனில் அஸ்கியூ என்பவர் பார்வையாளர் பகுதியில் இருந்து நகரசபைக் கூட்டம் நடந்த பகுதியை நோக்கி இலக்கின்றிச் சுட்டதிலேயே ஜேம்ஸ் டேவிட் கொல்லப்பட்டார்.

துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டவுடன் நகரசபை உறுப்பினர்கள் தத்தமது மேசைகளுக்கு அடியில் ஒளிந்து கொண்டதால் உயிர்ச் சேதம அதிகமின்றித் தவிர்க்கப்பட்டது. இச்சம்பவம் நடந்தபோது நகரசபை உறுப்பினர்கள் 20 பேரும், பார்வையாளர்கள் 150 பேரும் மன்றத்தில் இருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் நகரசபை நிகழ்வுகளை பார்வையிட வந்திருந்த பாடசாலை மாணவர்களாவர்.

இதனிடையே, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி மேற்படி நபர் துப்பாக்கியுடன் பார்வையாளர் அரங்கினுள் பிரவேசித்தமை குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ)

# லைபீரியாவில் தண்ணீரின்றி பொதுமக்கள் பெரும் அவதி!

மொன்றோவியா,ஜூலை25

லைபீரியாவுக்கான வழங்கல்கள் துண்டிக்கப்பட்டதை அடுத்து அங்கு பெரும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மக்கள் பட்டினியால் சாகும்நிலை உருவாகியுள்ளது என்று செஞ்சிலுவைச் சங்கம் எச்சரித்துள்ளது.

தலைநகரில் இருந்து வெளியேறும் 250 ஆயிரம் பேர் வரையான மக்கள் மனித அழிவுகளுக்குள் தள்ளப்படுகிறார்கள் என்று உதவி நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

பிரதான துறைமுகம் கிளர்ச்சியாளர்களின் கையில் இருப்பதால் உணவு, எரிபொருள்கள் தட்டுப்பாடாகியுள்ளன.

இதற்கிடையே-

இந்த வாரம் ஆயிரத்துக்கும் மேற பட்ட நைஜீரிய அமைதிப்படையினர் லைபீரியாவுக்குள் விரையவுள்ளனர். இவர்கள் அங்கு சென்றதும் ஜனாதிபதி ரெய்லர் லைபீரியாவில் இருந்து வெளியேறி நைஜீரியாவில் தஞ்சமடைவார் என்று செய்திகள் கோருகின்றன.

இதனை மேற்கு ஆபிரிக்க நாடுகளின் அமைப்புத் தலைவர் முகமது இபின் சம்பாஸ் உறுதி செய்து கூறும் போது, தொடர்ந்து வரும் நாள்களில் லைபீரியாவில் போர்நிறுத்தம் நிலைக்கும் என்று தெரிவித்தார்.

எனினும், கிளர்ச்சியாளர்கள் தாககுதல்களை நிறுத்தியுள்ள போதும் அரச படையினர் தலைநகர் மொன்றோவியாவையும் விமான நிலையத்தையும் பிரிக்கும் முக்கிய பாலத்தை மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக அறிவித்துள்ளனர். (ஒ)

# சதாமின் மற்றொரு ஒலிநாடா!

ஈராக்கில் ஆட்சியிலிருந்து கவிழ்க்கப்பட்ட சதாம் ஹூசைன் பேசியதாக ஓர் ஒலிநாடா தற்போது வெளியாகியுள்ளது.

அரபுத் தொலைக்காட்சி அந்த ஒலிநாடாவை ஒலிபரப்பியது.

அதில் பேசிய சதாம், 'அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஒன்றுபட்டு போரிடுங்கள்' என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

சதாம் ஹூசைனின் புதல்வர்களான உதய், குசாய் ஆகியோரை மோசுல் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுக் கொன்றதாக அமெரிக்கப் படையினர் அறிவித்தனர்.

அதன் பிறகு, சதாம் ஹூசைன் பேசியதாக ஒலிநாடா தற்போது வெளியாகியுள்ளது.

இப்பேச்சு சதாம் ஹூசைனின் குரலதானா என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.



தனது ஆட்சியின் கீழ் செயற்பட்ட ராணுவ வீரர்களுக்கு சதாம் அழைப்பு விடுப்பதாக அந்தப் பேச்சு அமைந்துள்ளது.

அமெரிக்காவுக்கு எதிராக ஆயுதமேந்திப் போரிட வேண்டும். அமெரிக்காவால் உருவாக்கப்படும் ஈராக் ராணுவத்துக்கு ஒத்துழைப்புத் தரவேண்டாம என்று சதாம் கேட்டுக் கொள்வதாக அப்பேச்சு அமைந்துள்ளது.

போர் முடியவில்லை என்று அமெரிக்கா கூறியுள்ளது. ஒரு வகையில் அதை வரவேற்க வேண்டும். எனது கட்சி பிளவுபடவில்லை. மக்களின் உறுதி தளரவில்லை. இப்போது போர் முடியவில்லை.

ஆக்கிரமிப்பாளரால் நாட்டின் நிலைமையை ஸ்திரமாக்க முடியாது. எதிரிகளால் நமது மக்களின் நெஞ்சுறுதி குலைந்துவிடாது என்று சதாம் கூறுவது போல் அமைந்துள்ளது.

கடந்த காலங்களில் சதாம் பேசியதாக வந்த ஒலிநாடாக்கள் அவரது உண்மையான குரல்தான் என்று உறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கோமா நிலையில் இருந்து இடி அமீன் நேற்று மீண்டார்

கடந்த வெள்ளிக்கிழமை முதல் கோமா நிலைக்கு உள்ளான உகண்டா முன்னாள் ஜனாதிபதி இடி அமீன் நேற்று கண்விழித்தார்.

இடி அமீன் கோமா உறக்க நிலையில் இருந்து குணமாகியுள்ளார் என்று சவூதி அரேபிய வைத்தியசாலை அறிவித்துள்ளது.

இப்பொழுது அவருக்கு செயற்கைச் சுவாசக்கருவிகள் பொருத்தப்படவில்லை. ஆனால், அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலேயே சிகிச்சை பெற்று வருகிறார்.

கோமா நிலைக்கு உள்ளான இடி அமீன் மீண்டெழமாட்டார் என்று அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து அவரது சடலத்தை உகண்டாவில் அடக்கம் செய்வதற்கு அனுமதி கோரப்பட்டிருந்தது.

ஆனால், இதற்கு அனுமதி கொடுக்க பின்னடித்த உகண்டா அரசு இடி அமீன் கோமா நிலையில் இருந்து மீண்டு வந்தால் கைது செய்யப்படுவார் என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டிஷ் மகாராணி முன் நிர்வாணமான இளைஞன்

லண்டன்,ஜூலை25

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்து எடுக்கப்பட்ட சிலருக்கு அரண்மனைத் தோட்டத்தில் விருந்து கொடுப்பது வழக்கம். அத்தகைய விருந்துக்காக அழைக்கப்பட்ட 3 பேரில் 17 வயதுடைய இளைஞரும் ஒருவர். அவர் ராணி அருகே நின்ற போது திடீர் என்று தன் உடைகளை அகற்றி விட்டு நிர்வாணமாக நின்றார்.

உடனே அங்கு இருந்த காவலர்கள் அவரை அப்புறப்படுத்தினர். அவரது நடவடிக்கை பொது நாகரிகமற்றது என்பதைத் தவிர குற்றம் ஏதும் இல்லை. அதனால், அவரைக் கைது செய்யவில்லை என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

## அமெரிக்காவிலிருந்து திரும்பியதும்

# பலஸ்தீனப் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை?

காஸா,ஜூலை25

பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸ் அமெரிக்கா சென்றிருக்கிறார். அமெரிக்கா ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை வெள்ளிக்கிழமை சந்தித்துவிட்டு நாடு திரும்பும்போது அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர பலஸ்தீன சட்ட சபை உறுப்பினர்கள் எண்ணியிருப்பதாக பொதுசனத் தொடர்பு அமைச்சர் புதன்கிழமை தெரிவித்திருக்கிறார்.

பலஸ்தீனக் கைதிகளை விடுதலை செய்வது, பலஸ்தீனரின் நடமாட்டத்தின் மீதான கட்டுப்பாட்டை விலக்குவது, யஸீர் அரபாத்தை அவரது தலைமைப் பணிமனையில் முடக்கி வைத்திருப்பதை விலக்கிக் கொள்வது, யூதக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்துவது, பலஸ்தீனப் பகுதிகளை, இஸ்ரேலியப் பிரதேசங்களில் இருந்து பிரிக்கும் வேலிகள் அமைக்கப்படுவதை நிறுத்துவது போன்ற பலஸ்தீனர்களின் கோரிக்கை தொடர்பாக இஸ்ரேல் அரசு எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பலஸ்தீனியரின் இந்த எதிர்பார்ப்புக்களை அப்பாஸ் வென்றெடுக்காவிடில், அவரைத் தொடர்ந்து பதவியில் வைத்திருப்பதா? இல்லையா? என்பது தொடர்பான வாக்களிப்பை பலஸ்தீன சட்டசபை உறுப்பினர்கள் மேற்கொள்ளவிருக்கின்றார்கள் என்று அந்த அமைச்சர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

பலஸ்தீனத்தின் பிரதமராக அப்பாஸ் நியமிக்கப்பட்டதையடுத்தே, மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் வலுப்பெற்றது. எனினும், இடையிடையே, சிறு வன்முறைச்சம்பவங்கள் நடைபெற்ற போதும் இஸ்ரேலியப் பிரதமரும் பலஸ்தீனப் பிரதமரும் சமாதானத் திட்டத்தை முன்னெடுப்பதில் அக்கறையாக உள்ளனர்.

பலஸ்தீனர்களின் கோரிக்கைகளை பிரதமர் அப்பாஸ் வென்றெடுக்காவிடின் அவர் பல புதிய சிக்கல்களுக்கு ஆளாக நேரிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், சமாதானத் திட்டத்தில் அரபாத்தை புறந்தள்ளி வருவதைப் பலஸ்தீனர்கள் விரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

### வேலை நிறுத்தத்தால் பல கோடி ரூபா பிரிட்டனில் நஷ்டம்

லண்டன்,ஜூலை25

பிரிட்டிஷ் விமானசேவை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு உள்ளனர். இதனால், அந்த நிறுவனத்துக்கு, கோடிக்கணக்கில் நஷ்டம ஏற்பட்டு உள்ளது. லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் இருந்து புறப்பட வேண்டிய விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. ஆயிரக் கணக்கான பயணிகள் விமான நிலையங்களில் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர நிர்வாகமும் தொழிற் சங்கமும் பேச்சு நடத்தின. இதில் எந்த முடிவும் ஏற்படாமல் பிரச்சினை தொடர்கின்றது. (ஒ)



## கௌரவிப்பு விழா

கழிபுரம்,ஜூலை25

சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டுள்ள தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த ச.திருவாதவூரரைப் பாராட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கௌரவிப்புவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வழக்கம்பரை முத்துமாரியம்பாள் ஆலயத்தின் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-28)

## தென்மராட்சி அபிவிருத்திக்கு யு.என்.எச்.சி.ஆர். உதவி

தென்மராட்சி,ஜூலை25

அகதிகளுக்கான ஐநா. தூதரகத்தின் உதவியுடன் தென்மராட்சி பிரதேசத்தில் பின்வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி பொது நூல் நிலையத்தினைப் புனரமைக்கவும், பிரதேசத்தில் சேதமடைந்த 79 வீடுகளுக்கு கூரைத் தகடுகள் வழங்குவதற்கும் - 41 தற்காலிகக் கொட்டில்கள் அமைக்கவும், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## கூட்டுறவாளர் தினவிழா

தென்மராட்சி,ஜூலை25

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையினர் நடத்தும் கூட்டுறவாளர் தினவிழா எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சி மத்திய விளையாட்டுத் திடலில் சபைத் தலைவர் அ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் முதன்மை விருந்தினராக தமிழீழ நிர்வாக சேவைகள் பொறுப்பாளர் பூவண்ணனும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் மற்றும் மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களும் கலந்து கொள்வர். (எ-117)

## ஞானச்சுடர் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை25

தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம கலைபண்பாட்டுப பேரவையினால் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பேரவைத்தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை சி.கிருஷ்ணபிள்ளை நிகழ்த்துவார். மதிப்புரையை சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் வழங்குவார். (எ)

## இளைஞரை பாம்பு தீண்டியது!

முரசுமோட்டைப் பகுதியில் பாம்புக்கடிக்கு இலக்கான நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டிமூலம் கொண்டுவரப்பட்டார். கணபதி குலம் (வயது -32) என்பவரே இவ்வாறு யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-8)


## தேவை

நகைக்கடை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஒருவரும் (வயது 40-50) பணியாள் ஒருவரும் தேவை. யாழ்ப்பாணத்தை அண்டியுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

மேலதிக விவரம் நேரில்.

**கிருபா நகை மாளிகை**
333, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0777-111123

(20662) (21-15-11-19)



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(28666)


## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 19 - 11 - 1961

உதிர்வு 30 - 07 - 1997

### செல்வி மைதிலி கந்தசாமி

திதி: 25.07.2003

ஆறாண்டு சென்றும் ஆறவில்லை உன்துயரம்
பாதிவழியில் எமைத் தவிக்கவிட்டுப்
பறந்து சென்றதேனோ?

அம்மா, சகோதரர்கள்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

(20575)(21-15-11-26)

## பசுமை நிறைந்த நினைவுகள் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அகம் மகிழ 31 - 07 - 1945

அகம் நெகிழ 25 - 07 - 2000

### அமரர் கிருபைரட்ணம் ஜெயசீலன்

(முன்னாள் கிராம அலுவலர், துன்னாலை கிழக்கு - ஜே/371)

அன்பு நிறைந்த தெய்வமே! அறிவு தந்த ஆருயிரே!
உங்கள் குரல் கேட்க உருகுகின்றோம் அப்பா!
வந்தொருக்கால் வாயாரச் சிரிக்க வைத்து
சிந்தை குளிரவைக்க அப்பாவே வந்திடுங்கள்.

பிரிவுத்துயரிலே:
மனைவி, மக்கள்,
மருமகள், பேர்த்தி.

அணிஞ்சிலடி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

(சி-29032)(21-15-11-26)


யாழ். மக்களுக்கு ஓர் அரியவாய்ப்பு!!!
வாருங்கள், வாருங்கள்......
யாழ்.பல்கலைக்கழகத்தில்
ஜெயா புக் சென்ரர் அனுசரணையுடன்
வணிகமாணவர் மன்றத்தினர் நடத்தும்
புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும்.
மலிவு விலையில் சகல நூல்களும் 10 வீத
கழிவுடன். பிரதிகளுக்கு முந்துங்கள்.

**புதிய வரவு**

ரமணிச்சந்திரன் கதைகள், கர்நாடக சங்கீதம், கம்ப்யூட்டர் நூல்கள், தமிழ் இலக்கியங்கள், சரித்திரம், மருத்துவம், சிறுவர்களுக்கான கதைகள், ஆங்கில இலக்கணங்கள், இலக்கியங்கள், சமய இலக்கியங்கள், பொறியியல், பாடசாலைக்குரிய நூல்கள், அப்பியாசப் புத்தகங்கள்,
C.R.கொப்பிகள் இன்னும் பல....
சொற்ப பிரதிகளே இருப்பில் உள்ளன.
இன்றே வாருங்கள்!

யாழ். பல்கலைக்கழக
1. நூலகக் கேட்போர்கூடம்
2. வணிகத்துறை விரிவுரை மண்டபம் ($CH_2$).

(C/29097) (26-21-15-11)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கதிரமலை சின்னத்துரை

கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், கல்வளை, சண்டிலிப்பாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிரமலை சின்னத்துரை 23.07.2003 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் குருநாதர் சின்னத்துரையின் அன்பு மனைவியும் திருமதி மார்க்கண்டு இராசாத்தியின் அன்புச் சகோதரியும் அம்பிகாதேவி (பனை அபிவிருத்திச்சபை), நாகேஸ்வரி, விமலாதேவி, வியாகேசன் (பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெல்லிப்பழை - பிள்ளையார்), ரவிதேவி, குகதாசன் (சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், புதுக்குடியிருப்பு - ரவி), காங்கேசன் (காலஞ்சென்ற சின்னண்ணா), பிரமிளாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சின்னத்துரை (ராசா), பாலசுப்பிரமணியம் (பாலசிங்கம்), நித்தியானந்தன், தயானந்தி, ரதி ஆகியோரின் அருமை மாமியாரும் தேவகி, துவாரகை, ஜீவகி, கிருஸ்ணகுமார், சியாமிளா, தர்ஜினி (2004 A/L), கிருஸ்ணகாந்தன் (தரம்11), அன்பினி (தரம்7 மகாஜனக் கல்லூரி), காயத்திரி, விஸ்ணு, கோபி, மிதுஷன், சுலக்ஷன், தனுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
*கல்வளை,*
*சண்டிலிப்பாய்.*

தகவல்:
அம்பிகாதேவி
(மகள்)

(20661) (21-15-11-25)

### வேலாயுதம் இராசரத்தினம்

வரியப்புலம், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் இராசரத்தினம் நேற்று (24.07.2003) அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி வேலாயுதத்தின் கனிஷ்ட புத்திரனும் ருக்குமணியின் அன்புக் கணவரும் குகானந்தன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), குகனேயன் (கணனிப்பகுதி - கனடா), குககுமாரன் (ஆசிரியர் - தென்ஆபிரிக்கா), Dr.ஜெயகௌரி(சுதேச மருத்துவர் - கொழும்பு), ஜெயசக்தி(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.07.2003) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வரியப்புலம்,*
*சுன்னாகம்.*

தகவல்:
Dr.U.ஸ்ரீசங்கர் (மருமகன்)
070 213321

(20659) (21-11-15-25)




உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(C-29108)



**மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள 'புத்தகக் கடல்'. 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணனி புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10 - ரூபா 100 வரை பெற்றுக்கொள்ளலாம். இவை தவிர, பாடசாலை அலுவலக உபகரணங்களும் பாடசாலை அழிபொருள்கள், மூலப்பொருள்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம். உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்ய தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

இல. 212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P.021-222 5542

(C/29764) (21-14-15)

உதயன்

# 83 ஜூலை தந்த பாடம்

சுதந்திர இலங்கையின் சரித்திரத்தில் நாட்டுக்குப் பெரும் அவப்பெயர் தேடித்தந்த நிகழ்வின் இருபதாவது ஆண்டு நிறைவு இப்போது அனுஷ்டிக்கப்படுகின்றது.

1983 ஜூலை கடைசி வாரத்தில் தென்னிலங்கை முழுவதும் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கொலை வெறித்தாண்டவத்தின் - கறுப்பு ஜூலையின் - இரண்டாவது தசாப்த நினைவு தினமே இது.

1983 ஜூலை 23ஆம் திகதி இரவு பலாலி வீதியில் திருநெல்வேலிச்சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற ஒரு தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதன் பின்னர் ஜூலை 25ஆம் திகதி - சரியாக இன்றைய தினத்துக்கு இருபது ஆண்டுகள் முன்பாக - தமிழினத்துக்கு எதிரான கொலைவெறித்தாக்குதல், காட்டுமிராண்டித்தனம் தென்னிலங்கை முழுவதிலும் கட்டவிழ்த்து விடப்பட்டது.

1977இல் ஆட்சியைப் பிடித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசியல் இனவாதக் காட்டுக் கூச்சல்போடும் ஒரு பெரும் பட்டாளமே இருந்தது. அமைச்சர் சிறில் மத்தியூ, நெவில் பெர்னாண்டோ என்று சிங்களப் பேரினவாதிகள் நாடாளுமன்ற உரை மூலமும் ஏனைய கூட்டங்கள், அறிவிப்புக்கள் மூலமும் இனவாதிகளுக்கு ஊட்டி வந்த உஷார், ஒரு சிறுபான்மை இனத்துக்கு எதிரான வரலாற்றுக் கொடூரமாக வெடிக்க வழிசெய்தது.

சுருங்கக் கூறுவதானால், அரச ஆதரவோடு திட்டமிட்டு நடத்தப்பட்ட பெரும் இன வன்முறையாக - கலவரமாக - இலங்கையின் சரித்திரத்தில் கொடூர நிகழ்வாக - 83 கலவரத்தைக் குறிப்பிடலாம்.

1977 ஒகஸ்ட் கலவரத்துடன் ஆரம்பித்த ஜே.ஆரின் இனவன்முறை ஆட்சி, 1981இல் யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டதன் மூலமான பண்பாட்டுப் படுகொலையுடன் தீவிரமடைந்து, 1983 ஜூலையில் அதன் சுயரூபத்தை முற்றாக வெளிப்படுத்தியது.

தன்னுடைய அரச பட்டாளமே இந்தக் கலவரத்தைத் தூண்ட வைத்து, வெடிக்கச்செய்து, படுமோசமான நிலையை ஏற்படுத்தியது என்பதை நன்கு தெரிந்திருந்த - புரிந்து கொண்டிருந்த - அரசியலில் கிழட்டு நரியான ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது வழமையான அரசியல் சாணக்கிய விளையாட்டை இந்த விடயத்திலும் மேற்கொள்ளத் தவறவில்லை.

இனக்கலவரத்துக்கான காரணத்தை இலகுவாக ஜே.வி.பி. மீது போட்டு அந்த இயக்கத்தைத் தடைசெய்து கதையைத் திசை திருப்பிக்கொண்டார்.

ஆனால், அன்று அவரும் அவரது அரசும் அதன் ஆதரவாளர்களும் இனவாதப் போக்கில் விதைத்த விதை இன்று அவரது இனத்துக்கே - சந்ததிக்கே - வினையாக வந்து நிற்கின்றது.

சிறுபான்மையினரான தமிழர்கள் தங்களது நியாயமான உரிமைகளைப் பெறுவதற்காக சிறிய கரந்தடிப் படையாக விடுதலைப் போரை ஆரம்பித்தபோது அந்த இனத்தின் மீதே இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம், அந்த உரிமைப் போரை அடக்கி விடலாம் என அவர் கனவு கண்டார். அந்தக் கனவு தந்த மிதப்பில்தான் இனக்கலவரத்துக்கு மத்தியில் "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" என்று அவர் சூளுரைத்தார்.

ஆனால், அவரது கனவு வெறும் கனவாகியே போய்விட்டது.

அவர் கட்டவிழ்த்து விட்ட இனக்கலவரம் தமிழரின் இனவிடுதலைப் போருக்கு உரமூட்டி, எண்ணெய் வார்த்து, சிறிய கரந்தடிப்படையை ஒரு தேசிய விடுதலை இராணுவமாக விஸ்வரூபம் எடுக்க வைத்து, அந்த விடுதலை இராணுவத்தை "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" - என்று இன்று இலங்கை அரசைப் பார்த்து, சம நிலையில் நிமிர்ந்து நின்று, நெஞ்சை நிமிர்த்திப் பேசவைத்திருக்கின்றது.

அன்று இனக்கலவரத்துக்கான தனது அரசின் பொறுப்பை அபாண்டமாக ஜே.வி.பி. மீது சுமத்தி, கதையைத் திருப்பி, தப்பிக்கொள்ள முயன்றார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.

திட்டமிட்டு தமிழர் மீது சுமத்தப்பட்ட அந்தக் கொடூரக் கலவரத்துக்காக இதுவரை ஆட்சியில் இருந்த எந்த இலங்கை அரசும் தமிழர்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரவில்லை.

அது ஒரு புறமிருக்க, அன்று தம்மீது அபாண்டமாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை, இன்று நாம் நிஜமாகவேபுரிவோம் என்ற முனைப்போடு கங்கணம் கட்டி நிற்கின்றது ஜே.வி.பி.

1983 கலவரம் யதார்த்தத்தில் தந்த விளைவு என்ன என்ற பாடத்தை ஜே.வி.பி. புரிந்து கொள்ளத் தவறியதே அதன் இன்றைய போக்குக்குக் காரணம் என்றால் அது தவறில்லை.

சுன்னாகத்துக்கும் மல்லாகத்துக்கும் இடையில்

## வீதியோரம் நிற்கும் பார ஊர்திகளால் போக்குவரத்துக்கு பெரும் இடையூறு

தெல்லிப்பழை,ஜூலை25

சுன்னாகம் ஜெற்மோட்டோர்ஸ் சந்தியிலிருந்து, மல்லாகம் சந்தி வரையிலான பகுதிகளில் வீதியோரங்களில் அடிக்கடி தரித்து விடப்படும் பார ஊர்திகள் மற்றும் பேருந்துகளால் வீதிப் போக்குவரத்திற்கு பெரும் இடையூறு ஏற்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேற்படி வீதியின் இருபுறமும் அமைந்திருக்கும் வணிகநிலையங்கள் மற்றும் மரக்காலைகளுக்கு மரங்களை ஏற்றிவரும் அல்லது ஏற்றவரும் ஊர்திகளே இவ்வாறான வீதியின் அரைவாசிப் பகுதியை நிரப்பியபடி தரிக்கவிடப்படுகின்றன என்றும் - கூறப்பட்டது.

சனநெருக்கடியும், வாகனநெருக்கடியும் கூடிய சுன்னாகம் நகரை அண்டிய வீதிப்பகுதியில் மேற்படி போக்குவரத்துக்கு இடையூறாக வாகனங்களை நிறுத்துவது பயணிகளுக்கு பெரும் இடையூறை ஏற்படுத்திவருவதாகவும் -

சமீபத்தில் இவ்வாறு வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த ஒரு பார ஊர்தியை, வேகமாகக் கடக்கமுயன்ற மினிபஸ் ஒன்று எதிரே சைக்கிளிலில் வந்துகொண்டிருந்த நபரை மோதிப் படுகாயப்படுத்தியது தெரிந்ததே.

இவ்வாறான விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-150)

## நாட்டு நடப்பு

### காதலி தீட்டிய கடிதம்

அன்பின் முல்லை வளவ!
அறிவொளி வீசும் கண்ணாய்
அறிவுரை பேசும் வாயாய்
தீண்டிட கல்லலப் போல
திரண்ட நல் அகன்ற தோளாய்!
நீண்டன நினது கைகள்
நிமிர்ந்தது உனது பார்வை
ஆண்டவர் தமிழர் நாங்கள்
அடிமையாய் வாழ்விழந்தோம் அல்ல
வேளத்தை விரட்டி ஓட்டி
வெஞ்சின சமரை வென்ற
தீரர்கள் வழியில் வந்தோமென்று
செப்புவாய் தினமும் அன்றோ?
தொண்டுகள் செய்யும் தீரா!
துணை உனை கொள்ள முன்னே
என்னுள மனக்கருத்தை
இயம்புவேன் தொடர்ந்து கேளாய்!
*பண்புடன் உனை நோக்கும்:*
*கயல்விழியாள்.*

- விகடகவி.

# 'அன்பளிப்பாக' மீன்கேட்ட படையினர் கொடுக்கமறுத்த மீனவரைத் தாக்கினர்!

## காக்கைதீவுக் கரையில் செவ்வாயன்று சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை25

மீன் தருமாறு கேட்டதும் அதனைக் கொடுக்க மறுத்த மீனவர் ஒருவரை படையினர் கடுமையாகத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

கடந்த செவ்வாயன்று காக்கைதீவு கடற்கரையில் காலை 8 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட மீனவரால் முறையிடப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 22ஆம் திகதி காலை காக்கைதீவுக்கடலில் மீன் பிடித்துக்கொண்டு கரைதிரும்பிய எலியஸ் சுரேஸ்குமார் என்ற மீனவரிடம் அங்கு நின்ற மூன்று படையினர் தமக்கு ஒருதொகை மீன்களை இலவசமாகத் தருமாறு கேட்டு மிரட்டியுள்ளனர்.

ஆனால், அந்த மீனவர் மீனைக் கொடுப்பதற்கு மறுத்து விட்டார். உடனே அந்த மூன்று படையினரும் சேர்ந்து சம்பந்தப்பட்ட மீனவரைக் கடுமையாகத் தாக்கியதுடன், அவர் பிடித்துவந்த மீன்களையும் நிலத்தில் கொட்டியுள்ளனர்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவத்தினரிடம் விசாரணை செய்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப்பாளர் றுவான் சந்திரசேகர காக்கைதீவு படைமுகாம் பொறுப்பதிகாரியைக் கேட்டுள்ளார். (எ-4)

# கீரிமலையில் திங்களன்று ஆடி அமாவாசை நிகழ்வுகள்

## விசேட போக்குவரத்துக்கும் ஏற்பாடு

சண்டிலிப்பாய்,ஜூலை25

ஆடி அமாசை தீர்த்தம் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமையன்று கீரிமலையில் நடைபெறவுள்ளது.

அன்று காலையில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு மாவைக்கந்தன் எழுந்தருளி வந்து புனித தீர்த்தத்தில் தீர்த்தமாடுவார். கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானும் அங்கு தீர்த்தமாடுவார்.

நகுலேஸ்வரர் ஆலயத்தில் அன்றையதினம் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. "மிருத்திங்ஜெய" மந்திர நூல்கள் பக்தர்களுக்கு வழங்கப்படும். அத்துடன், அன்றைய தினம் நண்பகல் மாகேஸ்வர பூஜையும் நடைபெறவுள்ளதாக நகுலேஸ்வரர் ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்தார்.

அமாவாசை தினத்தன்று பக்தர்கள் இறந்த தமது முன்னோர்களுக்காகப் பிதிர்தர்ப்பணம் செய்து தீர்த்தமாடுவதற்கு வேண்டிய வசதிகள் யாவும் புனித தீர்த்தக்கரையில் செய்யப்பட்டுள்ளன. வலி.வடக்கு பிரதேசசபை ஊழியர்கள் தீர்த்தக் கேணிப் பகுதியையும் சுற்றாடல்களையும் துப்புரவு செய்துள்ளனர்.

பற்றைகள், செடிகள் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டதுடன், பஸ் நிலையப் பகுதியும் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

ஆடி அமாவாசையை முன்னிட்டு கீரிமலை செல்லும் அடியவர்களின் நன்மைகருதி யாழ்மத்திய பஸ் நிலையத்திலிருந்து தெல்லிப்பழை மற்றும் சேந்தாங்குளம் ஆகிய இடங்களுக்கு வடபிராந்திய போக்குவரத்துச்சபை விசேட பஸ் சேவைகள் நடத்தவுள்ளது.

தெல்லிப்பழையிலுள்ள இராணுவ சோதனை சாவடியூடாகவும், சேந்தாங்குளத்திலுள்ள இராணுவ சோதனை சாவடியூடாகவும் பக்தர்கள் கீரிமலைக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் எனக் கூறப்பட்டது.

இதற்கிடையில் - பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் இம்முறை பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்காக அன்றையதினம் கீரிமலையில் ஒன்று சேருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, வழமையோன்று அல்லாமல் படையினர் இம்முறை பக்தர்களின் போக்குவரத்துக்கு இடையூறு செய்யாதவகையில் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-155)

பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபையின் கீழ்

## 200 தொழிற்கூடங்களில் 500 பேருக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூலை25

யாழ்ப்பாணம் பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபையின் கீழ் குடாநாட்டில் சுமார் 200 தொழிற்கூடங்களில் 520 இளைஞர், யுவதிகள் தொழிற்பயிற்சிகளைப் பெற்றுவருவதாக அந்த அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபையில் தமது விவரங்களைப் பதிவுசெய்த - 16 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட - இளைஞர், யுவதிகளே இப்பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

இவர்களுக்கு பயிற்சிக்கால ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாதாந்தம் 300ரூபா வீதம் அரசினால் வழங்கப்பட்டு வருகின்றது எனவும் -

பயிற்சி முடிவில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் மட்டும் சுமார் 60 வகையான தொழிற்பயிற்சிகளை இளைஞர், யுவதிகள் பெற்றுக்கொள்வதற்கு பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை ஏற்பாடு செய்துள்ளது எனவும் கூறப்பட்டது.

இதேவேளை - இத்தகைய தொழிற்பயிற்சிகளை வழங்கும் திட்டம் அண்மையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் 31 தொழிற்கூடங்களில் 70 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 தொழிற்கூடங்களில் 10பேரும், இத்தொழில் பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர். (ஒ-4)

### நாளை

ஆடி 10
சனிக்கிழமை
(26.07.2003)
திதி : துவாதசி
முற்பகல் 10.53 வரை.
நட்சத்திரம : மிருகசீரிடம்
மாலை 6.43
சனிப் பிரதோஷ விரதம்
சுபநேரம் : 3.02 - 4.32
ராகுகாலம் : 9.02- 10.32
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒரு செயல் மனதில் பதிவதைப் போன்று ஆயிரம் சொற்கள் மனதில் பதிவதில்லை.

## யாழ். ரயில் நிலையக் கட்டடத்தை சூறையாடும் சமூக விரோதிகள்

கொழும்புத்துறை,ஜூலை25

யாழ். ரயில் நிலையத்தின் சேதமடைந்த கட்டடங்களில் எஞ்சியுள்ள கட்டடப் பொருள்கள் சமூகவிரோதிகளால் களவாடப்பட்டு வருகின்றன.

இக்கட்டடங்களின் கூரைப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த இரும்புச் சட்டங்கள், தண்டவாளங்கள் மற்றும் பிற பொருள்கள் இவ்வாறு பகல் வேளைகளில் தினமும் அப்புறப்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பகல் நேரங்களில் இரும்புச் சட்டங்களை வெட்டி எடுக்கும் பெரும் சத்தம் தினமும் கேட்பதாகக் கூறப்படுகிறது. இப்பகுதியைச் சேர்ந்த சிலர் குழுவாக இணைந்து இந்த அரச சொத்துக்களைச் சூறையாடி விற்றுவருவதாகவும் -

இந்தநிலை தொடருமானால் யாழ்ப்பாணத்தில் புகையிரத நிலையம் இருந்ததற்கான தடயமே காலப்போக்கில் இல்லாது போய்விடக்கூடும் எனவும் -

பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-30)

## நெசவுப் பயிற்சி விண்ணப்பங்கள்

தெல்லிப்பழை,ஜுலை25

வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்றுறை திணைக்களத்தின் கீழ் இயங்கிவரும் அளவெட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைமையகத் திற்கு அருகிலுள்ள நெசவுப்பயிற்சி நிலையத்திற்கு பயிற்சியாளர்களாக வலி.வடக்கு பிரதேச செயலர் பிரி வைச் சேர்ந்த பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிறார்கள். பயிற்சி பெறவிரும்புவோர் வலி.வடக்கு பிர தேச செயலக நிர்வாக உத்தியோகத தருடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். -

(ம-150)

## முன்பள்ளி விளையாட்டு விழா

வலி.தெற்கு, ஜுலை25

உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள் ளது.

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய மைதானத்தில் மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் இந்தப் போட்டி நடைபெறும்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபரும் 'நிகொட்' திட்டப்பணிப்பாள ருமான வே.சாம்பசிவம் இதில் பிர தம விருந்தினராகக் கலந்துகொள் வார்.

சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபால சிங்கம், தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் சு.ஜெய ராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.


(எ-152)


**DISSERTATION BINDING**

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறைக்கேற்க அமைவாகக் கட்டிக்கொடுக்கப்படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ. 350/-

**BHARATHI PATHIPPAKAM**
OFF-SET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.
TELEPHONE: 021 222 3081
(64-28995) (21-15-11)


# ஆறாவது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 28-07-1933

விண்ணில் 31-07-1997

சங்கானை மேற்கு,
பண்டத்தரிப்பு.

அமரர்

## கனகசுந்தரம் பூலோகராஜா

(யாழ்.ராசி சில்க்ஸ், நல்லி சில்க்ஸ்
ஸ்தாபகரும் உரிமையாளரும்)

ஆறாவது ஆண்டும் ஆயிற்றோ
அந்தோ நீர் பிரிந்து
மாறாத வேதனையால் கிடந்தே
தவிக்கின்றோம்
கூறாமல் நீர் சென்ற இடம்தான்
எங்கேயோ?
ஆறாகக் கண்ணீர் வடித்தே என்றும்
நினைக்கின்றோம்
அன்போடும் பண்போடும் வாழ்ந்த
அப்பாவே!
என்றும் உம்மை எம் நெஞ்சிலே
பூஜிக்கின்றோம்
நீங்கள் காட்டிய பாதையிலே நாமும்
செல்கிறோம்
உங்கள் உருவம் நெஞ்சைவிட்டு
அகலாது!


பூலோகராஜா சசிதரன் (மகன்)
(உரிமையாளர்: ராசி சில்க்ஸ் - யாழ், நல்லிசில்க்ஸ் - யாழ்.),
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(29094)(21-15-19)




# ஓர் இலக்கை வைத்து இயங்கினால் வர்த்தகத்தில் முன்னேற்றம் நிச்சயம்!

## அலவ்வ வராகொட ஸ்ரோர்ஸ் அதிபர் தரும் விளக்கம்



ரீ.என்.எல். தொலைக்காட்சியில் 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் பீ.எஸ்.வரா கொடவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர் மொழிபெயர்ப்பாளர் சட்டத்தரணி செ.குணரத்தினம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் 'வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் கடந்த 22ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் பீ.எஸ்.வரா கொட.

கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் கல்வி பயின்ற பீ.எஸ்.வராகொட இன்று அலவ்வ நகரில் பிரசித்த பெற்ற வர்த்தகராக விளங்குகிறார்.

பாடசாலைக் கல்வியின் பின்னர் தனது மூத்த சகோதரியின் வர்த்தக நிறுவனத்தில் சுமார் எட்டு வருட காலம் வர்த்தக நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டார்.

பிரபலமான வர்த்தக நிறுவனங்களின் அலவ்வ நகர் முகவராக விளங்கும் வராகொட ஸ்ரோர்ஸ் அதிபர் பீஎஸ்.வராகொட ஓர் இலக்கை முன்வைத்து செயலில் இறங்கினால் வர்த்தக முன்னேற்றம் நிச்சயம் என்கிறார்.

ரீ.என்.எல். தொலைக்காட்சியில் தொழில் அதிபர் பீஎஸ்.வராகொடவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:* அலவ்வ நகரில் இன்று பிரசித்தி பெற்ற வர்த்தகராக விளங்கும் நீங்கள் கடந்து வந்த பாதையை ஞாபகப்படுத்திக் கூறுவீர்களா?

*பதில்:* கம்பஹாவைப் பிறப்பிடமாகக் கொண்ட நான், எனது கல்வியை கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் மேற்கொண்டேன்.

பாடசாலைக் கல்வியின் பின்னர் உயர் கல்வியைத் தொடர விரும்பவில்லை. வியாபார நுணுக்கங்களை அறிந்துகொள்வதற்காக எனது மூத்த சகோதரியின் வர்த்தக நிறுவனத்தில் சேர்ந்தேன்.

சுமார் எட்டு வருடங்கள் நான் அங்கு பணியாற்றி வியாபார நுணுக்கங்களைக் கற்றுத்தேர்ந்தேன். நான் தனியாக வர்த்தகத்தில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணத்துடன் அலவ்வை நகரில் கடையொன்றை வாடகைக்கு எடுத்துக்கொண்டேன். சில்லறைக் கடையொன்றை அங்கு ஆரம்பித்தேன். வராகொட ஸ்ரோர்ஸ் எனது வர்த்தக நுணுக்கம் காரணமாகப் படிப்படியாக வளர்ச்சி பெற்றது.

இலங்கையின் புகழ்பெற்ற யுனிலீவர் நிறுவனம் அலவ்வ பகுதிக்கு எனது வராகொட ஸ்ரோர்ஸை தனது முகவர் நிலையமாக நியமித்தது. சிறிது காலத்தின் பின்னர் புகழ்பெற்ற மலிபன் பிஸ்கட் நிறுவனம் அலவ்வ பகுதிக்கு என்னை முகவராக நியமித்தது. இப்படியாக எனது வராகொட ஸ்ரோர்ஸ் வளர்ச்சிப் பாதையில் வீறு நடை போடுகிறது.

*கேள்வி:* உங்கள் வர்த்தகத் துறை வளர்ச்சிக்கு முன்னோடிகள் யார்?

*பதில்:* எனது தந்தையார் சிறந்த குணநலன்களைக் கொண்டவர். அவரது குணநலன்களைப் பின்பற்றி வருகிறேன். அது எனது வளர்ச்சிக்கு மானசீகமாக உதவியது. மேலும் எனது சகோதரியின் வர்த்தக நிறுவனத்தில் பெற்ற பயிற்சியும் அங்கு நான் கற்றுக்கொண்ட வியாபார நுணுக்கங்களும் எனது வளர்ச்சிக்கு உதவின.

*கேள்வி:* உங்கள் வர்த்தகத்துறையில் எவ்விதமான சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளீர்கள்?.

*பதில்:* நாட்டில் அவ்வப்போது தோன்றிய வன்முறைச் சம்பவங்கள் எனது வர்த்தகத்தைப் பெரிதும் பாதித்தன. எல்லாச் சந்தர்ப்பங்களின்போதும் செலான் வங்கி எனக்குக் கைகொடுத்தது.

*கேள்வி:* புதிதாக வர்த்தகத் துறைக்கு வரவிரும்புவோருக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

*பதில்:* ஓர் இலக்கை நிர்ணயித்துக்கொண்டு ஓர் உத்வேகத்துடன் செயலில் ஈடுபடுங்கள். சிறுசிறு இழப்புக்களைச் சந்திக்க நேர்ந்தாலும் இறுதியில் நீங்கள் உங்கள் இலக்கை வெற்றிகரமாக அடைந்து வெற்றிகொள்வீர்கள்.

*கேள்வி:* உங்கள் எதிர்காலக் கனவு என்ன?

*பதில்:* இப்போதும் எனது வராகொட ஸ்ரோர்ஸ் வாடகைக் கட்டடத்திலேயே இயங்கிவருகிறது.

அலவ்வ நகரில் ஒரு கடைத் தொகுதியைச் சொந்தமாக ஏற்படுத்திக்கொள்வேன்.

விரைவிலேயே புதிய கட்டடத்துக்கு வராகொட ஸ்ரோர்ஸ் நிறுவனத்தை மாற்றவுள்ளேன்.

*கேள்வி:* வங்கிகளில் கிடைக்கும் உதவிகள் குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?

*பதில்:* இலங்கையில் அநேகமான வங்கிகள் வியாபாரிகளுக்கு உதவிக் கரம் நீட்டுவதில்லை. நானும் பல வங்கிகளில் கணக்குகளை வைத்திருந்தேன். இருந்தும் செலான் வங்கி எனக்கு பல வழிகளிலும் உதவி புரிந்துள்ளது.

*கேள்வி:* உங்கள் வர்த்தகத் துறைக்கு செலான் வங்கி வழங்கிய ஆதரவைக் குறிப்பிட முடியுமா?

*பதில்:* சாதாரணமாக வர்த்தகத்தை நடத்திக்கொண்டிருந்த என்னை யுனிலீவர் நிறுவனம் அலவ்வ பகுதிக்கான முகவராக நியமித்தது. அப்போது எனக்கு வாகனவசதி, களஞ்சியசாலை வசதிகள் இருக்கவில்லை.

இவற்றையெல்லாம் பெற்றுக்கொள்ள உதவி புரிந்தது செலான் வங்கி. எனக்கு அன்று செலான் வங்கி வழங்கிய உதவிகள் தான் இன்று நான் வர்த்தகத்தில் வெற்றி காண வாய்ப்பினை ஏற்படுத்தின. அன்றுமுதல் இன்றுவரை எனது வர்த்தகத்தின் உற்ற நண்பன் செலான் வங்கியே.

- இவ்வாறு கூறினார் வராகொட.

# ஊர்காவற்றுறை வைத்தியசாலை

**செய்திக்கட்டுரை**

**ஊர்காவற்றுறை செய்தியாளர்**

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை இருதரப்பினருக்கும் இடையில் மோதலைக் குறைத்துள்ளதே தவிர, மக்களின் இயல்பு வாழ்க்கையை நிலைநிறுத்தத் தவறிவிட்டது என்றே கூறவேண்டும்.

இந்த உடன்படிக்கையை தென் பகுதியில் ஒரு சாதனையாக தற்போதைய அரசு மார்தட்டி வருகிறது. ஆனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் துப்பாக்கி, ஷெல் சத்தங்கள் ஓய்ந்தனவேயொழிய மக்களின் இயல்பு வாழ்க்கை மீளக் கட்டியெழுப்பப்படவில்லை.

எனினும், வடக்கு - கிழக்கு பகுதிகளில் அரச நிர்வாகம் திறம்பட நடப்பதாக வெளியுலகுக்குக் காட்டுவதற்கான பிரசாரம் அரசசார்பு ஊடகங்களில் கச்சிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனினும், அரச திணைக்களங்கள் சிலவற்றின் நிலைமை யுத்தகாலத்தில் இருந்ததைவிட தற்போது மோசமாகவுள்ளது.

மிகமிக கவனிக்கப்பட வேண்டிய ஒன்றும் ஒவ்வொரு மனிதருடைய வாழ்வின் அவசியத் தேவையாக உள்ளதுமான சுகாதார மருத்துவ வசதிகள் இன்றுள்ள நிலையில் மோசமாகவே உள்ளன.

இதுவிடயத்தில் அநேகமான கிராமங்களைத் தன்னகத்தே உள்ளடக்கிய தீவகப் பிரதேசங்களில் நிலைமை இன்னமும் தலைகீழாகவே காணப்படுகிறது.

அண்மைக்காலங்களில் யாழ். குடாநாட்டில் அவ்வப்போது தொற்றுநோய்கள் அச்சுறுத்தி வருகின்றன. இதற்குக் கிராமப்புறங்களில் சுகாதார வைத்திய வசதிகள் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளமையே அடிப்படைக் காரணமாகும். இன்றைய நவீன உலகியலோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் 50 வருடங்கள் பின்னோக்கிய நிலையே அங்கு காணப்படுகிறது.

பொதுவாக, கிராமப்புறங்களில் ஏழை எளிய மக்களே அதிகம் உள்ளனர். இவர்களின் உயிர்நாடியாக உள்ளவை அரச வைத்தியசாலைகளே. தனியார் மருந்தகங்களிலும், தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெறுவதற்கு இவர்களது வருமானம் ஈடுகொடுப்பதில்லை. இப்பகுதிகளில் பலர் அறிந்தும் அறியாமலும் நோயின் தீவிரத்தன்மை காரணமாக வைத்திய ஆலோசனையின்றி மருந்தகங்களில் கண்ட மருந்து வகைளையும் வாங்கி உட்கொள்ளத் தலைப்படுகின்றனர். இதனால், தங்களை மேலும் நோயாளிகளாக்கிக் கொள்கின்றனர்.

தொற்றுநோய்களைப் பொறுத்தவரை குடும்பத்தில் ஒருவருக்கு அந்நோய் காணப்படின் அக்குடும்பத்திலுள்ள ஏனையவர்களை மட்டுமன்றி அக்கிராமத்தையே ஒரு கலக்குக் கலக்கி விடுகிறது. ஏழைக் குடும்பமொன்றில் நாளாந்த உழைப்பாளியான குடும்பத்தலைவர் தொற்று நோயினால் பீடிக்கப்படின் அவர் குணமாகும்வரை அக்குடும்பம் வருமானமின்றித் தவிக்க நேரிடுகிறது.

தீவுப்பகுதிகளில் குறிப்பாக, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த மெலிஞ்சிமுனை, சின்னமடு ஆகிய கிராமங்கள் வாந்திபேதி நோயினால் அண்மையில் பாதிக்கப்பட்ட கிராமங்களாகும். இத்தகைய நோயாளர்களை ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் வைத்து பராமரிக்கமுடியாத நிலையே காணப்பட்டது.

தகுதிவாய்ந்த வைத்தியர்கள் இன்மை, ஆய்வுகூடத்திற்கு போதிய தொழில்நுட்ப உபகரணங்கள் இல்லாத காரணங்களால் இங்கிருந்து நோயாளிகளை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பும் நிலைமை காணப்படுகிறது.

தீவுப்பகுதிகளில் ஊர்காவற்றுறை ஒரு பழைமை வாய்ந்த துறைமுக நகரம். சுங்கத்திணைக்களம், பொலீஸ் நிலையம், நீதிமன்றம், தபால் நிலையம் உட்பட பல்வேறு அரச திணைக்களங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. தற்பொழுது சுங்கத்திணைக்களம் தவிர, மற்றவை இயங்குகின்ற போதும் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையின் நிலைமை மோசமாகவே காணப்படுகிறது.

## மேம்படுத்தப்படுவது எப்போது?

இடம்பெயர்வின் காரணமாக நீண்ட காலமாக பற்றைக்காடுகள் மண்டிக் கிடந்த இப்பகுதிகளில் தற்பொழுது கணிசமானோர் மீள குடியமர்ந்துள்ளனர். இவர்கள் நீண்ட கால யுத்தத்தினால் பெரிதும் துயரங்களை அனுபவித்தவர்கள் எனினும், தற்பொழுது தமது சொந்த இடங்களில் பெரும் எதிர்பார்ப்புடன் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

தொடர் இடம்பெயர்வினால் போசாக்குக் குறைவு தொற்று நோய்களின் தாக்கங்கள் ஆகியவற்றுக்கு ஆளானவர்கள் இவர்கள். இதனால், தொற்று நோய்கள் இவர்களை இலகுவில் ஆட்கொண்டுவிடுகிறது. எனவே, வைத்தியசாலைகள் சிறப்பாக இயங்கவேண்டிய அவசியம் இங்குள்ளது.

தீவகத்தின் ஒரே மாவட்ட மருத்துவமனையான ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் அண்மைக்காலங்களில் அடிக்கடி வைத்தியர் இன்மையால் நோயாளிகள் அவதியுற நேரிட்டது.

மூன்று வைத்திய அதிகாரிகள், இரண்டு பதிவு மருத்துவ உத்தியோகத்தர்கள் ஒரு பல் மருத்துவ நிபுணர் ஆகியோர் கடமையாற்ற வேண்டிய இடத்தில் தற்பொழுது ஒரே ஒரு பதிவு மருத்துவ உத்தியோகத்தரே கடமையாற்றி வருகிறார்.

இவ்வைத்தியசாலைக்கு மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாததனால் வைத்தியசாலையில் ஒருவர் இறக்க நேரிடின் மரண விசாரணைகள், நீதி விசாரணைகள் நடத்த முடியாத ஒரு நிலைமை தொடர்ந்து காணப்படுகின்றது.

இவற்றைவிட, விடுதி எழுதுநர், ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர், தாதிய உத்தியோகத்தர், ஆண் மற்றும் பெண் பரிசாரகர், சுகாதார தொழிலாளர் ஆகிய பதவியணிகளிலும் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.

இங்கு மலேரியா பரிசோதனையைத் தவிர ஏனைய பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு போதிய மருத்துவ உபகரணங்கள் இல்லாததனால் ஏனைய பரிசோதனைகளை யாழ். போதனா வைத்தியசாலையிலே மேற்கொள்ள வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

ஊர்காவற்றுறையில் இருந்து மட்டுமன்றி - இவ்வைத்தியசாலைக்கு எழுவைதீவு, அனலைதீவு போன்ற தூரத்துத் தீவுகளிலிருந்தும் நோயாளிகள் சிகிச்சையின் பொருட்டு வந்து செல்கின்றனர்.

இதனால் தினமும் வெளிநோயாளர் பிரிவில் பல நோயாளர்களைக் கவனிக்கவேண்டி இருப்பதுடன், வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வரும் நோயாளரையும் ஒருவரே தொடர்ந்து கவனித்து வரவேண்டியுள்ளது.

எனினும், கடந்த வருடம் வெளிநோயாளர் பிரிவில் சுமார் 27ஆயிரம் பேர் வரையிலும், வார்ட்டுக்களில் தங்கி 2ஆயிரத்து 500பேர் வரையிலும் சிகிச்சை பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இவ்வைத்தியசாலையில் நிலவும் வசதியீனங்கள் தொடர்பாக ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நடைபெறும் பிரதேச ஒருங்கிணைந்த கூட்டங்களில் பிரஸ்தாபிக்கப்படுகின்றபோதும் எதுவித முன்னேற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

யாழ்குடாநாட்டில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இந்தியாவிலிருந்து வைத்தியர்களை வரவழைத்து சேவையில் அமர்த்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், அதுவும் நடந்தபாடாக இல்லை.

எனினும் கியூமெடிக்கா நிறுவனத்தின் பணி இங்கு நினைவு கூரத்தக்கது. வாராந்தம் ஒருநாள் நடமாடும் மருத்துவ சேவையினை ஊர்காவற்றுறையில் நடத்தி வருகிறார்கள். இவர்களின் வருகையை எதிர்பார்த்து குறித்த தினத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் பயனடைகின்றனர்.

இதுவே தீவகத்து நோயாளர்களின் விதி என்று விட்டுவிடாது இனியாவது ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையின் நிலையை மேம்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வருவார்களா?

★

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தற்சமயம் பாவனையிலுள்ள Gestetner - 250 (Legal Size) ஓவ்(f) செற் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.0777 481164, 0777 732296 (20665)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள லேனில் 10 பரப்புக் காணியுடன் நல்ல நிலையிலுள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: பேர்ள் றிச், T.P. 222 - 2882. (20672)

## பேக்கரி வாடகைக்கு

சுகாதார வசதிகளுடன் இயங்கிக் கொண்டிருக்கும் வெதுப்பகம் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு விளம்பர இல. 1964, மே/பா உதயன (20664)

## தவறிவிட்டது

நயினாதீவுக்கு செல்லும் வழியில் 23-07-2003 கே.கே.எஸ்.வீதி சைவ ஹோட்டல் ஒன்றில் Cannon Camera Visa Card, Driving License (U.K) பணம் 30,000/- உடுப்புக்கள் அடங்கிய சிறிய Bag தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் P.சத்தியபாலன், 312A, பலாலி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (20666)

## உதவித் திட்டம்

சமுர்த்தி சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் ஐந்து பயனாளிகளுக்கு நடைபாதை வியாபாரம் மேற்கொள்வதற்கான நடமாடும் விற்பனை வண்டி வட்டியில்லாத கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. (3-135)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கை மின்சார சபையில் இன்று 32 வருட சேவையைப் பூர்த்தி செய்யும்

மாகாண அபிவிருத்திப் பொறியியலாளர்



**உயர்திரு.வி.வேலுப்பிள்ளை** B.Sc. MIEE.

அவர்களும் அவரது குடும்பத்தினரும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென்று வாழ்த்துகின்றோம்.

பிரதிப் பொதுமுகாமையாளரும் உத்தியோகத்தர்களும்.

இலங்கை மின்சாரசபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-29109) (21-19-14)

# பரத நாட்டிய அரங்கேற்ற அழைப்பு

**செல்வி மீரா கணேஸ்வரன்**
**செல்வி நிலானி கணேஸ்வரன்**

அன்புடையீர்,

எங்கள் செல்வப் புதல்விகளும் சுவிஸ் (சூரிச்) திருக்கோணேஸ்வரர் நடனாலய அதிபர் சகலகலா வித்தகி, நாட்டிய கலைமணி ஸ்ரீமதி மதிவதனி சுதாகரன் *(யாழ். பல்கலைக்கழகம்)* அவர்களின் மாணவிகளுமான செல்வி மீரா கணேஸ்வரன், செல்வி நிலானி கணேஸ்வரன் சகோதரிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் ஆடி மாதம் 10ஆம் திகதி நாளை (26.07.2003) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற விருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி கணேஸ்வரன்

*இடம்*
வீரசிங்கம் மண்டபம்
யாழ்ப்பாணம்,
இலங்கை.

*காலம்*
26.07.2003
சனிக்கிழமை
மாலை
2.00 மணி.




திரு.திருமதி [illegible]
சிறுப்பிட்டி [illegible]
நீர்வேலி.
இலங்கை.

Friesstrasse 14,
8050 Zurich,
Switzerland.
Tel: 01-302 6159

UTHAYAN Graphics (20602) (15-19)

# யாழ்ப்பாணம் - கல்வியங்காடு
# அருள்மிகு இலங்கைநாயகி மனோன்மணி அம்மன் ஆலய
# புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா

**25.07.2003 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு**



**அம்பிகை அடியார்களே!**

25-07-03 வெள்ளிக்கிழமை மாலை4.00 மணியளவில் அம்பிகைக்கென புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெற அம்பிகையின் திருவருள் கூடியுள்ளது. அம்பாள் அடியார்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

31-07-2003 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு புதிய சித்திரத்தேரில் அம்பாள் பவனி வரும் அருட்காட்சியினைக் கண்டு தரிசித்து அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும்வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்புதிய சித்திரத்தேர்
**சு.இராசரெத்தினம்**
விநாயகர் சிற்பாலயம், திருநெல்வேலி

அவர்களாலும் அவரின் குழுவினர்களாலும் சிற்பக்கலையம்சத்துடன் வடிவமைக்கப்பட்டது.

புதிய சித்திரத்தேருக்கான நிதி உதவி செய்யவிரும்பும் அடியார்கள் தேவஸ்தானத்தில் வழங்கி அவற்றுக்குரிய பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

**கணக்கு இல. 50023-நல்லூர் கூட்டுறவு கிராமிய வங்கி**
**சு. பாலசுப்பிரமணிய ஐயர், ஆலய உரிமையாளரும், ஆதீனகர்த்தாவும்**

**பொ.கிருஷ்ணமூர்த்தி சர்மா**
**ஆலய நிர்வாகம்.**

(14-19)



இப்பிரபஞ்சத்தின் தாயாக விளங்கும் திரிபுரசுந்தரியாகிய அம்பிகை எம்மையெல்லாம் தனது அருட்கடாட்ஷத்தால் காத்து அருள்பவள். அனைத்து உயிர்களுக்கும் தாயாகவும் இப்பிரபஞ்சத்தில் உள்ள அசையும் அசைவற்ற பொருள்கள் அனைத்திற்கும் சத்தியாகவும் விளங்கும் தேவியை உபர்சனை செய்வதற்கு பல கிரமங்கள் உள்ளன. மந்திரம், தந்திரம் யந்திரம் ஆகிய மூன்று நிலைகளில் அம்பிகைக்கு நிகழும் வழிபாடு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மெய்யடியார்களின் நீண்டகால பெருவிருப்பம் இப்பொழுது நிறைவேறியுள்ளது. அம்பிகைக்கு ஓர் அழகிய சித்திரத்தேர் அமைத்து அதில் இலங்கைநாயகியாம் மனோன்மணி அம்பாள் ஆரோகணித்து வருவதைக்காண்பதற்கு மிகுந்த ஆவலோடு பார்த்திருக்கும் அடியார்களுக்கு அம்பிகை திருவுளம் இரஞ்சியுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்அழகிய சித்திரத்தேரை அமைத்துக் கொடுத்த விநாயகர் சிற்பாலய சிற்பாசாரியார் திரு.சு. இராசரெத்தினம் அவர்கட்கும் அவர்தம் குழுவினர்களுக்கும் அம்பிகையின் புதிய சித்திரத்தேர் திருப்பணிகளுக்கு நிதி, பொருள் , சரீர உதவிகள் புரிந்த அனைத்து அம்பிகை அடியார்களுக்கும் அம்பிகை யின் திருவருள் கிடைக்க அம்பிகையை வேண்டுவதுடன், இன்னும் பல திருப் பணிகளுக்கு தங்களால் ஆன நிதி உதவிகளை வழங்குமாறு கேட்டுக்கொள் ளுகின்றேன்.

**சிவஸ்ரீ சதாசிவ சுகுமாரக்குருக்கள்**
(மஹோற்சவ சிவாச்சாரியார்.)

**31.07.2003 வியாழக்கிழமை**
**காலை 8.00 மணிக்கு**
**இரதோற்சவம் நடைபெறும்.**

**ஆலய பரிபாலகர்.**

# 'முருகா' என்று பெயர் சொல்ல வினைகள் தாமே அகன்றுவிடும்

தமது காலத்தில் வாழாத பிற்காலத்தவரையும் நெறிப்படுத்தவே அருணகிரி பாடினான். அவன் பாடல் அத்தனையும் உபதேசப் பாடல்களாகும். முருகனிடம் பக்தி உள்ளவர்களுக்குத்தான் அயில் வேலன் கவி சுவைக்கும் உணர்ச்சி இன்றிப் பாட்டைக் கூறுதல் பாடல் எனப்படும். உணர்ச்சியுடன் பாடவேண்டும் நான் கலந்து பாடல்வேண்டும் அதுதான் ஓதுதல் எனப்படும். "ஓதுவார்தம்மை நன்னெறிக் குய்ப்பது நாதன் நாமம் நமச்சிவாயவே" அயில் வேலன் கவி பல உண்டு.

"பாவலர்க்கு எளியாய் ஓலம்" என்பது கந்தபுராணம். "பாடும் படியே பணியாய் அருள்வாய்", 'பாடுவார் பசி தீர்ப்பார்', "சித்தம் அழகியார் பாடாரோ", "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்ற சொற்றொடர்களின் வாயிலாகப் பாடல்களின் சிறப்பு வெளிப்படுகின்றது. தமிழ்த்தெய்வம் முருகன். அகத்தியருக்குத் தமிழ் ஆசானாய் இருந்தவர். அடியார் பலரின் கவிதைகளை ஏற்றுக் கருணை புரிந்தவர்.

"குறுமுனிக்கும் தமிழுரைக்கும் குமர முத்தம் தருகவே" என்றும், "சிவனை நிகர் பொதிகைவரை முனிவன் அகமகிழ இரு செவிகளிலும் இனிய தமிழ் பகர்வோனே" என்றும் அடியவர் பாடியிருக்கின்றார்.

"அழித்துப் பிறக்கவொட்டா அயில் வேலன்" உடம்போடு பிறந்தவர் அவ்வுடம்பினுள் இருக்கும் உயிரை என்றோ ஒரு நாள் பிரியத்தான் வேண்டும். அதுதான் மரணம். பிறவி வேண்டாம், வேண்டாம் என்றே யாவரும் முருகனை வேண்டுகின்றனர். அவன் அருள் பெற்றவர் மீண்டும் பிறக்க மாட்டார். முருகனின் கையில் உள்ளது அயில்வேல் - கூர்மையான வேல், அது ஞானத்தின் சின்னம், அஞ்ஞானத்தைப் போக்குவது ஞானம். அறிவு வர அறியாமை அகலும், அறியாமை அகலவே பிறப்பு அகலும் அவன் கவியை எழுத்துப் பிழையறக் கற்க வேண்டும்.

வெறும் கல்வியால் அவனை அறியமுடியாது. நூல் அறிவால் வருவது அபரஞானம். "எத்தனை முறைதான் கற்பினும் கேட்பினும் என் இதயமோ அடங்கவில்லை" என்றார் இராமலிங்கர். கல்வி அனுபவமாக உள்ளுணர்வாக மாறவேண்டும். "உனை எனதுள் அறியும் அறிவைத தருவாயே" என்றார் அருணகிரி.

அன்பே சிவம், அன்பு வேறு ஆசை வேறு "ஈசனோடாயினும் ஆசை அறுமின்" என்பது திருமந்திரம். வேலனை கவியைப் பாடப்பாட, அன்பு தேடிவரும்.

உலகில் எத்தனையோ கவிகள் உண்டு. ஆயினும், அன்பை வளர்ப்பது அயில் வேலன் கவியேயாம். தமிழரிடையே பாட்டுக்குப் பெருமதிப்புண்டு. தாலாட்டுப்பாட்டு, விளை



யாட்டுப்பாட்டு, வேடிக்கைப்பாட்டு, காதற்பாட்டு, ஒப்பாரிப்பாட்டு எனப் பலவகையுண்டு. மீண்டும் பிறவாத அமைதி பெறவேண்டும் என்றால், முருகனுடைய பாடல்களை ஓதவேண்டும். ஒருசில பக்திப்பாடல்கள் எம்மை எல்லாம் முருகனிடம் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. "அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்...." என்பது போலக்

**வி.வாசுகி**

கண்ணீர் மல்கிக் கதற வைக்கின்றன. அயில் வேலன் கவிகளே இன்று பிரபல்யமாக விளங்குகின்றன.

குழந்தையின் மொழி அழுகை அடுத்துவரும் மழலை இனிமையானது. மழலை மாறப்பேச்சு உண்டாகிறது. மனிதன் பெறும் பெரிய வரம் பேச்சு. பேச்சில்லாத ஊமைக் குழந்தை குமர குருபரன் செந்தூரிலே பேசினான், பாடினான், யாரைப் பாடினான், கந்தனைப் பாடினான். நாவினால் முருகனைப் பாடவேண்டும். "வாயே வாழ்த்து கண்டாய்" என்றார் நாவரசு. அவன் தந்த வாக்கை அவனுக்காகவே பாட வேண்டும். பேசும் வாய்தான் வாய், சாப்பிடும் வாய் வாயாகாது. யானையை வாயில்லாப்பிராணி என்பதேன்? அதற்கு வாயுண்டல்லவா.

அயில் வேலன் கவியைப் பாடாதவரை மறுபிறப்பில் வாயில்லாப் பிராணியாகவே இறைவன் படைப்பான். முருகன் கவியைப் பாடினால் எல்லாக் கடவுளரையும் பாடியதாக முடியும். கந்தன் காலடியை வணங்கினால், கடவுள் யாவரையும் வணங்குதல் போலாம்.

நமது மனக்கருத்தே கனவிற் தோன்றுகின்றது என்பது உளவியலாளர் கருத்து. "பண்ணேறு மொழியடியார் பரவி வாழ்த்தும் உன்பாதமலர் அழகினை இப்பாவி பார்க்கின் கண்ணூறு படுமென்றோ கனவிலேனும் காட்டென்றால் காட்டுகிலாய்" என ஓர் அடியவர் உருகிக் கேட்கிறார். கனவிற் காணவேண்டும் என்றால் நனவிலே - இரவிலே- படுக்கையிலே நினைத்தால் அவன் வருவான். இப்படி முருகனைக் கண்டு களித்தவர் எத்தனை பேர். வரலாறு காட்டும், வா வா என்று தினமும் பாடி அழைத்தால் நிச்சயம் வருவான் வள்ளிமணாளன். வழுக்கி வீழினும் முருகா என்பேன். "நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்றார் நாவரசர்.

உலக வேதனை மூன்று; ஒன்று மரணவேதனை, செத்தவன் திரும்பி வந்து அதுபற்றிச் சொல்லாமையால் அதன் கொடுமை தெரியாது. ஊகித்து அறியலாம். மரணபயத்தை நீக்க வேண்டுமாயின் முருகன் பாடல்களைப் பாடி அப்போதைக்கு இப்போதே ஆயத்தம் செய்யவேண்டும். யமன் வருவான், எப்போதென்று தெரியாது. அந்தவேளையிற் பாடமுடியாது அதிற் பயனில்லை. எனவே, அயில் வேலன் கவிதை பலப்பலவுண்டு. அவற்றை அன்புடன் ஓதிவழிபட்டால் கந்த மோட்சம் உறுதியாகும்.

*நன்றி: ஞானச்சுடர்.*




வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு அண்மையில் தாவடிதெற்கு ஸ்ரீ காளி அம்பாள் சனசமூக நிலைய முன்றிலில் நடத்திய விழாவில் சம்மேளனத் தலைவர் சி.இராசலிங்கம் தலைமையுரை நிகழ்த்துவதையும் டாக்டர் ஆ.தியாகராசா மற்றும் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

## அரச அதிகாரிகள் சுருட்டாமல் கலைஞர்களுக்கு ஒதுக்கப்படும் நிதியைப் பாதுகாக்க வேண்டும்!

### கலைபண்பாட்டுக்கழக பிரமுகர் உரை

கைதடி,ஜூலை25

கலைஞர்களுக்கென ஒதுக்கப்படும் நிதியை அரச அதிகாரிகள் சுருட்டாமல் பாதுகாக்கவேண்டும்.

அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற தென்மராட்சி கலைஞர்களுக்கான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ்.மாவட்ட கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கனெக்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சிவநாத் தலைமையில் இடம்பெற்ற இக் கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கலைஞர்களுக்கென ஒதுக்கப்படும் நிதியை அரச அதிகாரிகள் சிலர் ஏப்பமிட்டு வருகின்றார்கள். நிர்வாகச் சீர்கேடுகளைப் பயன்படுத்தி இந்த நிதி அபகரிக்கப்பட்டு வருகின்றது. எனவே, கலைஞர்களுக்கென ஒரு கட்டமைப்பு இருக்குமானால் இப்படியான தில்லுமுல்லுகள் இடம்பெறாவண்ணம் பாதுகாத்துக் கொள்ளலாம். எனவேதான், யாழ்மாவட்டத்திலுள்ள எல்லாக் கோட்டங்களிலும் கலைஞர்களை உள்ளடக்கிய அமைப்புகளைத் தெரிவு செய்து வருகின்றோம்" - என்றார்.

இக்கருத்தரங்கின் இறுதியில் தென்மராட்சிக்கோட்ட கலைஞர்கள் 11 பேரைக் கொண்ட குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இக் கருத்தரங்கில் தென்மராட்சியைச் சேர்ந்த பல கலைஞர்கள் கலந்துகொண்டார்கள்.

(ஓ-75)

## ஊஞ்சல் கட்டிய சேலை கழுத்தை இறுக்கி சிறுமி பரிதாப மரணம்!

### பன்னல தோட்டத்தில் சம்பவம்

ஊஞ்சல் துணி கழுத்தை இறுக்கியதால் அதில் ஆடிக்கொண்டிருந்த சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இச்சம்பவம் பன்னல பிரதேசத்தில் உள்ள தோட்டமொன்றில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தோட்டத்தின் தொழிலாளர் விடுதியொன்றில் சேலையினால் கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் மேற்படி சிறுமி ஆடிக்கொண்டிருந்தார் என்றும் - ஊஞ்சல் சுழன்று சேலை கழுத்தை இறுக்கியதை அடுத்து சிறுமி மூச்சுத்திணறல் அடைந்தார் என்றும் - கூறப்பட்டது.

உடனடியாக அருகிலுள்ள ஆஸ்பத்திரிக்கு சிறுமியைக் கொண்டு சென்றபோதிலும் அவர் இடைவழியில் உயிரிழந்தார்.

நாகராஜா டிலக்மணி பிரியா (வயது11) என்ற சிறுமியே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

(எ-10)

## மக்களை ஈடுவைக்காமல் போராடி சமபலத்தை உருவாக்கியவர் பிரபா

### எழுச்சிப் பேரவைக் கோட்ட அமைப்பாளர் உரை

யாழ்ப்பாணம்,ஜூலை25

மக்களையோ நிலத்தையோ ஈடுவைக்காமல் போராட்டத்தை நடத்தி சமபடைப் பலத்தை உருவாக்கிய பெருமை தலைவர் பிரபாகரனையே சாரும்.

- இவ்வாறு தெரிவித்தார் தேசிய எழுச்சிப் பேரவையின் நல்லூர் கோட்ட அமைப்பாளர் கசிவராசா. அண்மையில் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலி வடகிழக்கு கிராம அலுவலர் பிரிவில் ஊரகக் குழு அமைத்தல் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிராம அலுவலர் வி.வேலாயுத சேயோன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கசிவராசா தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது:-

அரசு யுத்தத்தைக் காரணமாகக் காட்டி பிறநாடுகளிடம் இருந்து பல கோடி ரூபாவைப் பெற்றுள்ளது. அண்மையில் பெறப்பட்ட புள்ளி விவரம் ஒன்றின் மூலம் இலங்கையில் உள்ள ஒவ்வொரு குடிமகன்மீதும் 85ஆயிரம் ரூபா கடன்சுமை ஏற்றப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஆனால், எமது மக்களையோ நிலத்தையோ ஈடுவைக்காமல் யுத்தத்துக்கு முகம் கொடுத்து தமிழருக்கு என்று ஒரு சமபடைப்பலத்தை உருவாக்கியவர் விடுதலைப் புலிகளின் தலைவர் வேபிரபாகரன். இதை யாரும மறைக்கவோ மறுக்கவோ முடியாது. மக்களின் உதவியுடனும் தனது தந்திரோபாயம் மூலமும் மக்களையும், மண்ணையும் விற்காமல் போராட்டத்தை அவர் வளர்த்துள்ளார்.

இன்று மக்களைப் பாதுகாக்கவே இராணுவம் உள்ளதாக சர்வதேசத்துக்கு அரசு கூறுகின்றது.

ஆனால், இங்கு இராணுவம் மக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமிப்புச் செய்கின்றது.

எனவே, மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டத்தினால்தான் சர்வதேச சமூகத்திற்கு எமது அழுத்தத்தை வெளிக்காட்டமுடியும் - என்றார் அவர்.

(ஓ-180)

### பிதிர்க்கடன் நிறைவேற்ற வில்லூன்றிக் கேணியில் விசேட ஏற்பாடுகள்

ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு பொதுமக்கள் பிதிர்க்கடன்களை நிறைவேற்றும் வகையில் கோட்டடியில் உள்ள வில்லூன்றி தீர்த்தக் கேணியில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

தீர்த்தக்கேணி மற்றும் பகுதிகளைத் துப்புரவு செய்யும் பணிகள் வில்லூன்றிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 28ஆம் திகதி திங்கட்கிழமை அன்று பிதிர்க்கடன் நிறைவேற்றி விசேட கிரியை வழிபாடுகள் செய்யத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.(எ-30)

## சமய வாழ்வு வாழ்ந்தால் இறையருள் தாமே கிட்டும்!

எங்கும் பரந்திருக்கின்ற இறைவனை எல்லாப் பொருளிலும் உறைபவனாகக் கண்டு வணங்குவது சைவசமயத்தின் சிறப்பம்சமான ஒரு பண்பு. அந்த இறைவனே எல்லாவற்றையும் ஆள்வதால் ஆண்டவனாகக் கண்டு வழிபடும் இயல்பைக் கொண்டிருக்கின்றான். சர்வ வியாபகமாய் பரந்திருக்கின்ற அபரம்பொருளை ஆலயம் வாயிலாக நாம் கண்டு வழிபடுகிறோம். ஆலயத்தில் இறைவழிபாட்டைச் செய்யும் காலத்தில் அவ்வழிபாட்டுடன் ஆணவப் பண்பு சேர்ந்து கொள்ளாதவகையில் பார்க்க வேண்டிய தேவை உண்டு.



**இரத்தினசபாபதிக்குருக்கள் திருமாறன்**

இந்த ஆணவப் பண்பானது இரண்டு வழிகளில் வந்து எம்மைப் பிடித்து விடுகின்றது. ஒன்று, நூல்களைக் கற்ற கல்வியால் வருவது. மற்றையது, பெறுகின்ற செல்வச் செழிப்பால் வரும் ஆணவம். இத்தன்மையை நமது ஆலய இறை வழிபாட்டுடன் இணைத்திருக்கும் மட்டும், இறையருளைப் பெற்றுவிடமுடியாது. நாம் இறைவனுக்கு அர்ப்பணமாகவேண்டும். இறைவனிடத்திலே அடைக்கலம் தேடவேண்டும். இப்பண்பைப் பேணி ஆணவ மலத்தை விலக்குகின்றபோதுதான் தெய்வம் இறங்கிவந்து நம்மை ஆட்கொள்ளும்.

ஒரு காலத்தில் பிரம்மாவும், விஷ்ணுவும் யார் பெரியவர் என்ற ஆணவம் மேலிட்டபோது அடிமுடி தேடிய வரலாற்றைப் படித்திருக்கிறோம். இவ்வரலாற்றிலே இறுதிவரை கல்விக்கு அதிபதியாக சரஸ்வதி தேவியைத் தனது நாவிலே வைத்திருந்தும் கூட பிரமா ஜோதி வடிவத்தின் முடியைக் காண முடியவில்லை. அதேபோல செல்வத்துக்கு அதிபதியாகிய மகாலக்மியை நெஞ்சிலே வைத்திருக்கின்ற மகா விஷ்ணு மூர்த்தி ஜோதியின் அடியைக். காணமுடியாமல் போய்விட்டது.

**ஞானக்கதிர்**

அடிமுடி தேடுகின்ற அந்தக் கைங்கரியத்தில் கல்வியும், செல்வமும் இருவரின் ஆணவத்துக்கு உட்பட்ட வகையிலே தமது பங்களிப்பை வழங்கவில்லை. நிறைவாக எம்பெருமானின் அருளே பிழையை உணர வைத்து இறைவனை காணவைத்தது என்ற உன்னதமான தத்துவத்தை உணர்த்துகின்றது அந்தப் புராண வரலாறு.

அதனால்தான், இறையருளை வேண்டி நிற்கின்ற காலத்தில் ஆணவம் முற்றாக நீங்கவேண்டும். அதற்காக சைவசமயம் வகுத்து வைத்திருக்கின்ற வாழ்வியல் உண்மைகளை நாம் பேணவேண்டும். அன்பு என்கின்ற கருவியைக் கொண்டு மனப்பூர்வமாக இறைவழிபாட்டைச் செய்து நாமெல்லாம் தூயவர்களாகி இறையருளை பெறுவோமாக!

## 'வியாசனின் உலைக்களம்' கவிதை நூல் வெளியீடு

### புதுவை இரத்தினதுரை எழுதிய

### யாழ். பல்கலையில் முதலாம் திகதி நடைபெறும்

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'வியாசனின் உலைக்களம்' கவிதை நூலின் முதலாம் பாகம் வெளியீட்டு விழா எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புரையைப் புலிகளின் பிரமுகர் வே.பாலகுமாரனும், வெளியீட்டுரையை 'வெளிச்சம்' ஆசிரியர் சி.கருணாகரனும், மதிப்பீட்டுரைகளைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ், ஐ.சாந்தன், மு.திருநாவுக்கரசு ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

தேசியக் கொடியேற்றல், ஈகச்சுடரேற்றல், அமைதி வணக்கம் ஆகியன இடம்பெற்று அதனைத் தொடர்ந்து உரைகள் ஆரம்பமாகும்.

இந்த நூலுக்கான முன்னுரையை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும், மதிப்புரையைப் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ச.பொட்டுவும் எழுதியுள்ளனர்.

புலிகளின் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நூலை வெளியிட்டு வைப்பர். சிறப்புப் பிரதிகளை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வழங்குவார்.

(எ-10)

## அன்பிய கருத்தரங்கு

இன்று (25.07.2003) வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த மேற்படி கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் பங்குத் தந்தையர்களுக்கு அறிவிக்கப்படும்.

அருட்கதிர்,
இல.81, குருசோல் வீதி,
யாழ்ப்பாணம். (20686) (32)

இயக்குநர்
அருட் தந்தை சாள்ஸ் கொலின்ஸ்.

## வீட்டு பணியாளர் (பெண்/ஆண்) தேவை

85 வயது ஓய்வுபெற்ற அரச மேலதிகாரிக்கு வீட்டுப்பணிக்கு 40-50 வயதுக்கு உட்பட்ட ஆண்/பெண் உடன் தேவை. நற்குணமுள்ளவராகவும் நற்சுகமுடையவராயும் இருத்தல் அவசியம். தங்குமிட வசதியும் நல்ல சம்பளமும் சலுகைகளும் கிடைக்கும். விரும்புவோர் உடன் நேரில் சந்திக்கவும்.

*முகவரி:*
"சிவஸ்கந்தஸ்தான்"
துன்னாலை மேற்கு.
கரவெட்டி.

த.கந்தசாமி
ஓய்வுபெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர்.

## வைத்திய சேவை

சகலவிதமான வாதரோகங்கள், தொய்வு, மலேரியா, நீரிழிவு, உடல் பருமன், முடிஉதிர்தல், முடிநரைத்தல் முதலான சகல வியாதிகளுக்கும் ஏற்ற சிகிச்சை அளிக்கப்படும்.

தினமும்

*காலை 8.30 முதல் 12.30 வரை*

*பிற்பகல் 3.30 முதல் 6.30 வரை*

**டாக்டர் த.சிவானந்தன்.**
"ஹோப் கிளினிக்",
264, பலாலி வீதி, கந்தர்மடம்,
(பேபி ஸ்ருடியோ முன்பாக) (20678) (25)

## தவறிவிட்டது

FIAT

யாழ்ப்பாணத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் 21.07.2003 இல் FIAT பட்டியுடன் திறப்பு கோர்வை தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி ஈசன் களஞ்சியத்தில் ஒப்படைக்கவும். அல்லது 0777-110892 என்ற தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும்.

(சி-29124)(31-12-18)

University of Jaffna, Sri Lanka

PROFESSOR SIVAPATHASUNTHARAM MAGESWARAN MEMORIAL LECTURE

Date & Time :
25th July 2003 at 3.00 p.m.

Venue : Kailasapathy Auditorium,
University of Jaffna.

Delivered by :
Professor (Miss) V.Arasaratnam,
Dean, Faculty of Medicine.

Title : "UNDERSTANDING GLYCAEMIC INDEX FOR A HEALTHY LIFE".

Those who are interested are cordially invited.

Vice - Chancellor,
University of Jaffna.

(சி-29129) (31-18-12-13)

## 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



இலங்கை மின்சார சபையில் மாகாண வழங்கல் கட்டமைப்பு பொறியியலாளராக கடமையாற்றும்

## திரு.வேலுப்பிள்ளை

அவர்கள் இன்று தனது 60 ஆவது பிறந்தநாளை கொண்டாடும் இந்நாளில் அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் மேன்மேலும் பல சிறப்புக்கள் பெற்று வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

திரு. இரத்தின வடிவேலும்
சக ஊழியர்களும்.

*கட்டமைப்பு பொறியியலாளர் பகுதி,*
*இலங்கை மின்சார சபை.* (20694) (12-18-18-31-29)

## நடமாடும் இலவச கண்பரிசோதனை முகாம்



### உங்கள் கண்களை நாங்கள் காப்போம்

* உங்கள் கண்களை இலவசமாக பரிசோதனை செய்வதற்கும்

* சகல வகையான மூக்குக் கண்ணாடிகளையும் விசேட கழிவு விலையில் பெற்றுக்கொள்வதற்கும்


* கண் பார்வை குறைந்த பொதுமக்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.



இடம் : நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
நேரம் : காலை 9.30 (புதிய நேரம்)
காலம் : 27.07.2003 (ஞாயிற்றுக்கிழமை)



### துஷா மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்



544, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம.
T.P: 021 222 3461. (20688) (31-12-18-29)

## மின்னொளியில் மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

# பூங்கனிச் சோலை

எதிர்வரும் 26/27ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு)
காலை 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை.

எமது தாயகத்தில் எங்குமே பார்த்திராத புதிய மெருகுடன் பளிங்கு கற்களினால் புதிதாக வடிவமைக்கப்பட்ட தேர், தண்ணீர்ச் சிந்திகள் மற்றும் பல.

உங்கள் சிறார்கள் பார்த்து மகிழ ஓர் அரிய சந்தர்ப்பம்

உயிருள்ள மிருகங்கள், மான்கள், குரங்கு, மயில், பறவையினங்கள்,
செயற்கை மிருகங்களான யானை, புலி, டைனோசர், கழுகு

மற்றும் புதிய இனப்பூங்கன்றுகள்

யூக்கோலியா, பெண்டர்பிறாஸ், பாங்கொக்கிச், வதனிபா,
10இன சைபிரஸ்,வெரிகட்,தொலட், அப்ரிகட், மண்டோரியா, சோணக்கரி,
சிங்லவெதர், தைத்ரிச்சா, கோடிற் இந்தியா ஆகியவையும்
காட்சிப்படுத்தப்பட உள்ளன.

சிங்கப்பூர் காட்சிகளுக்கு நிகராக அமைந்துள்ள இந்த இயற்கை எழில் நிறைந்த காட்சிகளை கண்டு மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- வெளிப்புறப் படப்பிடிப்புகள் 26ஆம், 27ஆம் திகதிகளில் நடைபெறமாட்டாது.

*முடமாவடி,*
*இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி.*
T.P. 021-222 2976.
E.mail:- Poonganisoolai@ Yahoo.Com.

(C/29120) (26)

# மரண அறிவித்தல்கள்

## பிள்ளையாகுட்டி இராஜரட்ணம்

திருப்பூர் மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி, ஓடக்கரையை வசிப்பிடமாகவும் கொண்ட பிள்ளையாகுட்டி இராஜரட்ணம் 24.07.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் செல்லத்துரை கமலபாக்கியத்தின் சகோதரரும் ஜெயக்கொடி (கனடா), வெற்றிக்கொடி (வவுனியா), ராசக்கொடி (பிரான்ஸ்), சமறக்கொடி (இத்தாலி), செல்வக்கொடி (பிரான்ஸ்), அன்புக்கொடி (பிரான்ஸ்), செல்வராணி (பருத்தித்துறை), பேபிகாந்தராணி (வவுனியா), தேவிகாராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தங்கராணி, காந்தராணி, சபாரட்ணம், தவராசா, அருந்தவராணி, இராஜரட்ணம், மாலா, மலர்விழி, யமுனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் 27.07.2003 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, மாலை 3.00 மணிக்கு சுப்பர்மடம் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*கல்லூரி வீதி,*
*ஓடக்கரை,*
*பருத்தித்துறை.* (C/29127) (29-12-13-31)

தகவல்:
இ.செல்வக்கொடி
(மகன்)

## திருமதி சின்னம்மா அப்புத்துரை (கமலம்)

சுதுமலை வடக்கு, கண்ணிதோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா அப்புத்துரை அவர்கள் நேற்று (24.07.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்ணிதோட்டம்,*
*சுதுமலை வடக்கு.*
(20692) (32-12-13-31)

தகவல்:
வை.ஞானபாலசிங்கம் (சகோதரன்)
அ.சந்திரமாதேவி (மகள்)
(வலிகாமம் கல்வி வலயம்)

## சிற்றம்பலம் ராதாகாந்தி

சந்தாதோட்டம், பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், ஸ்காபரோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் ராதாகாந்தி 23.07.2003 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் சி.சிற்றம்பலம் (காந்தி), காலஞ்சென்ற நல்லம்மா சிற்றம்பலம் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், கலாவின் அன்புக் கணவரும், ஜெய்ஷன், ஜோஷ்வா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற F.S. செல்வராஜா மற்றும் பாக்கியம் செல்வராஜா ஆகியோரின் அன்பு மருமகனும் வனிதாகாந்தி, லலிதாகாந்தி (கொழும்பு), ஜெயாகாந்தி (அமெரிக்கா), சைதாகாந்தி (கனடா), பிரபாகாந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தில்லை நடராஜா, அரியரட்ணம், விக்கினேஸ்வரி (அமெரிக்கா), புஸ்பகாந்தன் (கனடா), மித்திராதேவி (கனடா), ஜெயந்தி (அமெரிக்கா), நிமலேந்திரன் (கனடா), லதா (கனடா), ராதா (கனடா), கீதா (கனடா), கண்ணன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வனிதாகாந்தி*
*தில்லை நடராஜா,*
*19, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்: மா.அரியரட்ணம்.
(சிற்றி சைவன் ஸ்ரோர்ஸ்).

57, Shandon Drive,
Scarborough, Ontario,
M1R 4M4, Canada. T.P: (416) 4443474.

(20695) (31-12-18)

## சிறிநிவாசன் சரவணபவன்

பண்ணாகத்தைச் சேர்ந்த சிறிநிவாசன் சரவணபவன் நேற்று (24.07.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் அமரர் செ.சிறிநிவாசன், அமரர் திருமதி பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், திருமதி பராசக்தி கனகரத்தினத்தின் அன்புச் சகோதரரும் அமரர் பொ.கனகரத்தினத்தின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2003) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சுழிபுரம் திருவடி நிலை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இத்தகவலை யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்ணாகம்,*
*சுழிபுரம்.* (20691) (32-12-18-31)

தகவல்:
திருமதி ப.கனகரத்தினம்
(சகோதரி).

# எஸ்-லோன் குழாய்கள் வாங்கும்போது S-Lon பெயர் பொறிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்து வாங்குங்கள்.



## போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் தரமுயர்ந்த எஸ்- லோன் பீ.வி.சி. குழாய்கள், பொருத்துக்கள், பீலிகள் என்பன சகல அளவுகளிலும் தாராளமாகக் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

நீர்க்குழாய்கள், பொருத்துக்கள், பீலிகள் வாங்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோன் என்ற பெயர் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்து வாங்கத் தவறாதீர்கள்.

S-Lon

என்றும் முன்னணியில்

எஸ்-லோன் யாழ்ப்பாண விநியோக நிலையம்
287, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021-2225950

## சமய சந்நிதிகளில்

சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதி நாள் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. திருப்பலிப் பூசையை அடுத்து திருச்சொருப பவனி இடம் பெறும்.

ooo

இளவாலை புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவ இறுதி நாள் திருவிழா இன்று வெள்ளிக் கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. திருப்பலி பூசை, திருச்சொரூபப்பவனி என்பன இடம்பெறவுள்ளன. (ஒ-135)

ooo

ஊரெழு கிளானைப்பதி பர்வத வர்த்தினி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 31ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் 01ஆம் திகதி தீர்த்த திருவிழாவும் இடம்பெறும். (ஒ-72)

ooo

உடுப்பிட்டி,இமையாணன் பெரிய தம்பிரான் ஆலய இராச இராஜேஸ்வரி அம்பாள் வருடாந்த மஹோற்சவம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது

எதிர்வரும் 31 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஒ-10)

ooo

பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'கெபி' நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்படவிருக்கிறது.

யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் ஜெஸ்க்கிலஸ் அடிகளார் கெபியைத் திறந்துவைப்பார்.

இதேவேளை -

மேற்படி ஆலய வருடாந்த திருவிழா கடந்த 18ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடு இடம்பெறவுள்ளது. நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுப்பார். (எ-4-30)

## உதைபந்தாட்டம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் யாழ். மாவட்ட முன்னணி உதைபந்தாட்ட அணிகளிடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் யாழ். கலைவாணி விளையாட்டுக் கழகமும் வல்லை ஆதிபராசக்தி விளையாட்டுக் கழகமும் விளையாடவுள்ளன. (ஒ-86)

## பாடநூல்கள் விநியோகம்

வலிகாமம்தெற்கு,ஜூலை25

ஆங்கில மொழி மூலம் தரம் 6இல் பாடப்போதனைகளை ஆரம்பித்துள்ள பாடசாலைகளுக்குத் தேவையான புத்தகங்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆங்கில மொழிமூலம் போதனைகளை ஆரம்பித்துள்ள பாடசாலை அதிபர்கள் தமக்கு தேவையான பாடநூல்களை தத்தம்பிரிவு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக விண்ணப்பித்து கல்வி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை -

12ஆம் 13ஆம் தரங்களுக்கான ஆங்கில மொழி பாடநூல்கள் தேசிய கல்வி நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். தேவையான அதிபர்கள் அதற்கும் விண்ணப்பித்து பாடநூல்களை பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-152)

## சமுர்த்தி வங்கி மகாசங்கம்

சமுர்த்தி மகாசங்கம் உருவாக்கும் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் (வலி.தென்மேற்கு), சங்கானை (வலி.மேற்கு) மற்றும் காரைநகர் ஆகிய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கி வரும் சமுர்த்தி வங்கிச் சங்கங்களை இணைத்து சமுர்த்தி மகாசங்கம் அமைக்கப்படவுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இந்த சமுர்த்தி வங்கி மகாசங்கம் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

---

## JAFFNA MEDICAL ASSOCIATION

### Annual General Meeting and Presidential Address - 2003

The Council members have decided to have the Annual General Meeting to elect New members on 23rd August 2003, at 11.30a.m. at the Clinical Lecture hall, Teaching hospital Jaffna.

The office bearers will be elected and it will be followed by Presidential Address at 12noon.

All the members and Doctors are cordialy invited.

Secretary (JMA). (C/29118) (21-25-15-19)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

திருமதி கு.இராஜேந்திரன் அவர்களின் தந்தையார்

### சு.கோபாலு

அவர்கள் இறைவனடி சேர்ந்தமையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு, அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி. – ஆசிரியர் நலன்புரிக்கழகம்.

(20670)(21-19-15)

---

மானிப்பாய்

## கோவில்பற்று ப.நோ.கூ.சங்கம்

## ஏல விற்பனை

எமது சங்கத்தில் தறிக்கப்பட்ட மாமரக் கொப்புகள், பாவிக்கப்பட்ட லொறி ரயர்கள், பற்றிகள், இசுசு லொறி இயந்திரம், வெற்றுச்சாக்குப் பைகள் என்பன விற்பனைக்குண்டு. இதனை ஏலவிற்பனையில் பெறவிரும்புவோர் 31.07.2003 புதன்கிழமை காலை 10.00மணிக்கு நடைபெறும் ஏலவிற்பனையில் அன்றைய தினமே பணத்தைச் செலுத்தி பொருள்களைப் பெற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம்.
மானிப்பாய்.

(C/29116) (21-26-19-15)

---

## JAFFNA CO- OPERATIVE STORES LTD

### யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

மேற்படி நிறுவனத்தின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி அதன் பங்குதாரர்கள், வைப்பாளர்கள் ஆகியோர் கூடி முடிவெடுப்பதற்கு ஏதுவாக அவர்களது விவரங்களைச் சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி நிறுவனத்தின் பங்குதாரர்களும், வைப்பாளர்களும் தத்தமது முழுப்பெயர், தற்போதைய விலாசம், பங்கு/வைப்பு போன்ற முழு விவரங்களை எதிர்வரும் 10-08-2003 ஆம் திகதிக்கு முன்பாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**திரு.வே.நடராசா சட்டத்தரணி**
**இல.03, நவீன சந்தை மேல்மாடி,**
**யாழ்ப்பாணம்.**

**கந்தையா சீவஞானம்** — செயலாளர்
**வே.நடராசா** — தலைவர்

**இயக்குநர்கள் சார்பில்**

*யாழ்ப்பாணம்.* (20679)(21-15-19)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 13 - 09 - 1950



அரக்கர் பிடியில் 27 - 07 - 2000

### அமரர் கார்த்திகேசு இராசசேகரன்

திதி: (25-07-2003) துவாதசி

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
அகிலத்தில் நாங்கள் இருக்கும்வரை
உன் நினைவுகள் நீண்டுகொண்டே போகும்.

உன்பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

"பிருந்தாவனம்"
பத்தமேனி, அச்சுவேலி. (20660) (21-15-19)

---

# நினைவஞ்சலி

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 21 - 02 - 1921



மறைவு 25 - 06 - 2003

### தங்கவேலு சுவாமிநாதன்

எங்கள் அன்பு பப்பாவே!
அன்பு என்ற சொல்லுக்கே வாழ்வில் உயிர் கொடுத்தீர்களே
அன்புக்கும் அரவணைப்புக்கும் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்றழைக்க உறவென்று ஏது இனி?
உங்கள் பிரிவால் எங்கள் வீட்டின் ஒளிவிளக்கு
அணைந்துவிட்டது
நீங்கள் எங்களை விட்டு சென்று முப்பத்தியொரு நாள்கள்
ஆனாலும்
என்றும் உங்கள் அன்பும், பாசமும் எம் எல்லோரினதும்
உள்ளங்களை விட்டு நீங்காது.

*"ஆழ்கடல் வற்றினாலும் எம் அன்புக்கடல் வற்றாது"*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*


அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், நேர்முகமாகவும், தொலைபேசி, தந்தி, மடல்கள் மூலம் அனுதாபச் செய்தியை அனுப்பியவர்களுக்கும், உணவு தந்து உதவி செய்தவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் கலங்கும்:
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளை.**

*12/4, அத்தியடி புதுவீதி,*
*யாழ்ப்பாணம்.*

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 - 09 - 1953



இனஅழிப்பு 25 - 07 - 1983

### சுவாமிநாதன் அமிர்தராஜன்

எம் நெஞ்சில் நிறைந்த அன்பு மலரே
நீ பிறந்து இருபத்தொன்பது ஆண்டு வரையும் உன்னோடு
நாம் வாழ்ந்தோம்
எண்பத்திமூன்றாம் ஆண்டு இனகலவரத்தின் போது
படுகொலை செய்யப்பட்டு
உயிர்நீத்த செய்தியை நாம் உடன் அறியாததால்
உமது பொன் உடலை பார்க்காத பாவிகள் ஆகிவிட்டோம்
அண்ணாவே!
நீர் அம்மாவையும், எம்மையும் விட்டுச்சென்று இருபது.
ஆண்டுகள் காலமும்
நாம் நித்தம் நித்தம் ஏங்குவது நீர் அறிவீரோ!
எமது அருமை அண்ணாவே! எமக்கு ஒருமுறை காட்சி தர
மாட்டீரோ!
உம் நினைவு நாளில் எம் பப்பாவையும் உம்முடன் அழைத்து
விட்டீரோ!
வருடங்கள் பல சென்றாலும் என்றும் உம் நினைவுடன்
வாழ்வோம்.

உமது பிரிவால் கலங்கும் :
**அம்மா, சகோதரர்கள்,**
**சகோதரிகள், மைத்துனர்கள்,**
**மைத்துனிகள், மருமக்கள்.**

(20682) (26-16-18)

# புலமைப்பரிசில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை25
தீவக வலயத்திற்குட்பட்ட தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் இலவசக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9மணி முதல் காரைநகர் இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் நடைபெற வுள்ளது.

தீவக வலயத்தைச் சேர்ந்த சகல பாடசாலைகளினதும் தரம் 5 மாணவர்களையும் இந்த கருத்தரங் கில் பங்குபற்றுமாறு தீவக வலய கல்விப்பணிப்பாளர் எஸ். வேணு கோபால் கேட்டுள்ளார்.

(ம-5)


## லிபேட்டி அச்சுவேலி

எதிர்வரும் வெள்ளி மட்டும்
விஜய் மற்றும் பிரியங்கா சோப்ரா நடித்த
தமிழன் (ரீல்ஸ்)
தினசரி காட்சிகள்
3.00, 7.00 (புதிய நேரம்)
காலை 11.00 மணிக்கு THE WORLD IS NOT ENOUGH (ரீல்ஸ்)
(C/28688) (31-12-18) (007 ஜேம்ஸ் பாண்ட்).



## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி (ரீல்ஸ்)
தினசரி: 10.30, 2.30, 6.30, 9.30.
(C28841) (31-12-18)

## லஷ்சுமி சினிமா இணுவில்

சரத்குமார், மீனா, ரம்யாகிருஷ்ணன் நடித்த
பாறை
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/28976) (31-12-18)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

பாடசாலை மாணவர்கள், பெரியோர்கள் பார்த்து மகிழக்கூடிய பக்திப் படம்
கரண், குஷ்பு நடித்த
ஸ்ரீ பண்ணாரி அம்மன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
THE ART OF THE WAR
தினசரி 8.45 இற்கு.
(C28977) (31-12-18)

## நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், கிரண், கவுண்டமணி நடித்த
பரசுராம் (ரீல்ஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00 (பு.நே.)
28 முதல்
தினசரி இரவு 7.00 மணிக்கு ஆங்கிலத் திரைப் படம் காண்பிக்கப்படும்.
(C28767) (31-12-18)

## இணுவில் பொது நூலகம், சன சமூக நிலையம்
## புதிய கணனி வகுப்புகள் ஆரம்பம்
## M.S. OFFICE, Children Programme

இணையவிரும்பும் மாணவர்கள் உடனடியாக தமது பெயர் விவரங்களை நூலகத்தில் பதிவுசெய்யவும்.
குறிப்பு:- இக்கற்கை நெறிகள் மிகக் குறைந்த கட்டணத்தில் சேவை நோக்குடன் பயிற்றுவிக்கப்படுகின்றன.
ஆரம்பம்: 29-07-2003 செவ்வாய்க்கிழமை 5.00 P.m.
(20687) (32-12-18-31)

## OLD BOY'S ASSOCIATION OF ST. PATRICK'S COLLEGE, JAFFNA
## ANNUAL GENERAL MEETING - 2003
## வருடாந்த பொதுக் கூட்ட அழைப்பு

காலம் : 27.07.2003 - ஞாயிறு பி.ப. 4.00 மணி
இடம் : கல்லூரி மதுரம் சதுக்கம் - S.P.C.

புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் சகலரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

No. 59, St. Patrick's Road, Jaffna. (20689) (12-18-31)
S.Mariathas, GEN. Secrctary.

## வட பகுதியில் இப்பொழுது
## பல வர்ணங்களில் இறபர் முத்திரைகள்

ஆச்சரியமா? இப்பொழுது எமது நிறுவன மூலம் உங்களுக்குத் தேவையான இறபர் முத்திரைகளை சிவப்பு, நீலம், பச்சை, கறுப்பு, மண்ணிறம் என பல வர்ணங்களில் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

★ மைவிடத் தேவையில்லை
★ பல்லாயிரக்கணக்கான பிரதிகள்
★ நீடித்த பாவனை
★ கவர்ச்சியான, விரும்பிய வடிவங்களில் செய்துகொள்ள
★ உங்கள் படங்களும் இடம்பெற

தரமான நவீன முறையிலமைந்த இறபர் முத்திரைகள் செய்து பெற
யசோ
35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
0777-110610
(20693) (32-18-12-31)


# யாழ்.பல்கலைக்கழகத்தில்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகிஷ்கரிப்பு சம் பந்தமாகவும் சித்தமருத்துவத்துறையை பீடமாக்கு வது பற்றியும் கலந்துரை யாடிய போது பேராசிரியர் அருட் பிரகாசம் அவர்கள் மாணவர்களுக்கு பின் வரும் விடயங்களைபற்றி விளக்கிக் கூறியிருந்தார்.

★ துணைவேந்தரின் கீழ் எந்த ஒரு துறையும் நேரடியாக இயங் குவது சட்டத்திற்கு முரணானதாகும.

★ பல்கலைக்கழகங்களின் கீழ் பல நிறுவனங்கள் தொழிற்படுவது புதிய விடயமல்ல. அவ்வாறான நிறுவ னங்கள் பின்வருமாறு:-

கொழும்பு பல்கலைக்கழகம் - உள்நாட்டு மருத்துவ நிறுவகம், கண னித் தொழில்நுட்ப நிறுவகம், தொழி லாளர் கல்விசார் நிறுவகம்.

களனிப் பல்கலைக்கழகம் - கம் பகா விக்கிரமாராச்சி ஆயுள்வேத நிறு வகம்.

- நுண்கலை நிறுவகம்,

மொரட்டுவப் பல்கலைக்கழகம் - தொழில்நுட்ப நிறுவகம்.

★ கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சம்மதத்துடன் விபுலானந்த இசை நட னக்கல்லூரி பல்கலைக்கழக சட்டதிட் டத்திற்கு அமைய நிறுவன அந்தஸ் திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல சித்தமருத்துவத் துறைக்கு நிறுவக அந்தஸ்து வழங் கப்படும்.

இதேசமயம் சித்தமருத்துவ மாண வர்களால் 08.07.2003 இல் பல் கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவருக்கு அனுப்பப் பட்ட கடிதத்தில் தாங்கள் சித்தமருத் துவத் துறையை பீடமாக்க வேண் டும் என்ற கோரிக்கையை முன்வைத்து விரிவுரைகளை பகிஷ்கரித்து வருவ தாக குறிப்பிட்டிருந்தனர்.

அந்தக் கடிதத்திற்கு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் பி.ஆர்.ஆர்.என். மெண்டிஸ் தனது பதிலை 23.07.2003 திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் மாணவர் மன்ற தலைவருக்கு எனக் கூடாக அனுப்பிவைத்துள்ளார். அதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் பின்வரு மாறு:-

★ நான் பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழுவின் அங்கத்தவ ராகிய பேராசிரியர் கே.டி. அருட்பிர காசம் அவர்களை உங்கள் கடிதம் சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பிக் குமாறு கேட்டிருந்தேன். அவர் தான் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைக் கல்லூரியில் அமைந்துள்ள விருந் தினர் விடுதியில் 21 ஆம் திகதி மாலை சித்தமருத்துவ மாணவர் பிரதிநிதிகளை சந்தித்து 3 மணி த்தியாலங்கள் கலந்துரையாடியதாக வும் மாணவர்களின் கோரிக்கைக்கு அமையதான் ஒரு நிறுவகத்தின் செயற்பாடுகள் பற்றியும் இறுதிப் பரீட்சையின் பின்னர் யாழ். பல் கலைக்கழகம்தான் பட்டங்களை வழங்குமே தவிர நிறுவகம் வழங் காது எனவும் வலியுறுத்திக் கூறிய தாகவும் குறிப்பிட்டார்.

மாணவர் மன்றம் பகிஷ்கரிப்பை தொடருமானால் எதிர்காலத்தில் சித்த மருத்துவ அலகுடன் எந்த பேச்சுகள் நடத்தவும் தான் தயாராக இல்லை எனவும், பிழையான வழி களில் உங்கள் மன்றம் அறிவு றுத்தப்பட்டு தவறாக வழிநடத்தப் பட்டு நிறுவனத்திற்கு பதில் பீட மாக்கப்படவேண்டும் என கோரிக் கைகள் முன்வைத்துள்ளீர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பேராசிரியர் பத்மநா தனின் சிபார்சிற்கமையவே ஒரு நிறு வனத்தை உருவாக்கி அதனை சித்த மருத்துவத்தின் ஓர் உயர் புல மைத்துவ நிலையமாக வளர்க்க வேண்டும் என்பதையே நோக்க மாக கொண்டுள்ளது.

பேராசிரியர் பத்மநாதன் சித்த மருத்துவம் தமிழரின் பாரம்பரிய கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்த ஒரு மருத்துவ முறை என்றும் இந்த மருத்துவம் சிறந்த முறையில் வளர்க்கப்படாவிட்டால் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தமிழ் இனத்திற்கு எதிராக செயற் படும் ஒரு அமைப்பு என மற்றவர் களை சிந்திக்கவைக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை ஓர் இடைக்கால நிர்வாக சபையை சித்தமருத்துவ அலகை நிர்வகிக்க அமைத்துள்ளமையை பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு ஏற்றுக்கொண்டுள்ளது. அத்து டன் துணைவேந்தரின் கீழ் சித்த மருத்துவத்துறை இயங்கி வந்த இணைப்பை சில சட்டரீதி யான காரணங்களுக்கமைய பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு 17.07.2003 இல் நடைபெற்ற தனது கூட்டத்தில் இல்லாமல் செய்துள்ளது.

ஆகவே, நீங்கள் பகிஷ்கரிப்பை கைவிட்டு உங்கள் கற்பித்தல்/கற் றல் கடமைகளைத் தொடரவேண்டு மென அறிவுறுத்துகின்றேன்.

- இவ்வாறு பேராசிரியர் மென் டிஸ் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள் ளார்.

இந்த நிலையில் துணைவேந்தரா கிய நான் எந்த விடயங்களையும் பேச் சுக்கள் மூலம் தீர்க்கலாம் என்ற நம்பிக்கையுடன் மாணவர் களையும், விரிவு ரையாளர்களை யும், கல்விசாரா உத்தி யோகத் தர்களையும் விரிவுரைகள் ஒழுங் காக மீண்டும் ஆரம்பிக்க சகல ஒத்து ழைப்பையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பல்கலைக்கழகம் எந்தத் துறை யின் கல்வி மேம்பாட்டிற்காகவும் அபி விருத்திக்காகவும் சகல வளங் களையும், நிதியையும் பயன்படுத் தும் எனவும் ஆகவே எதிர்காலம் சித்த மருத்துவத்திற்கு வளமாக அமைவதற்கு மாணவர்கள், பகிஷ் கரிப்பை கைவிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இத்துறையை நிறுவன அந்தஸ் துக்கு உயர்த்தும் போது அது வலு வான ஒரு சட்ட வரையறைக்கு உட் பட்டு தனது கல்விசார் நடவடிக்கை களை சிறப்பாகச் செய்யக் கூடிய அந்தஸ்துக்கு உயரும் வாய்ப்பு உண்டு. இதற்கு மாறாக இச்செயற் பாடு இத்துறையை யாழ். பல்கலைக் கழகத் திலிருந்து பிரிந்து செல்ல வழிவகுக்கும் என்ற பீதி ஏற்றுக் கொள்ள முடியாதது.

எக்காரணம் கொண்டும் நாம் எடுக் கும் நடவடிக்கைகள் இப்பிரிவு தொடர்ந்தும் யாழ். பல்கலைக் கழகத்துடன் இருப்பதை உறுதி செய்யுமே தவிர ஒரு போதும் பிரிந்து செல்ல இடமளிக்கமாட்டாது. இந்த உறுதி மொழியை மூதவை மற்றும் பேர வையின் சார்பாக நான் உறுதியாகக் கூறுகின்றேன் என்றுள் ளது.

(ம)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்




உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2804346 இருந்து 2822551 வரை
சீட்டிழுப்பு இல. 1420
திகதி 23.07.2003

வெற்றி எண்கள்
05 08 15 37 44
போனஸ் எண் 21

ஜக்பொட் பரிசு
ரூபா.5,788,500/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 5,788,500/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 118 | 10,000/- | 1,180,000/- |
| 3 | 5,787 | 500/- | 2,898,500/- |
| 2 | 96,040 | 20/- | 1,920,800/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 05ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 117,472 | 10/- | 1,174,720/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,474,020/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 6,696,950/-

தொடர் இல. 3790118க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஜூலை 26ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2806253-0-25
2808131-3-79
2814587-4-38
2804531-8-67
2820873-2-16

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி, கொழும்பு 3.
யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



## மரண அறிவித்தல்
### திருமதி ஏகாம்பரம் ஞானம்மா

கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி ஏகாம்பரம் ஞானம்மா அவர்கள் நேற்று (24.07.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஏகாம்பரத்தின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற இராசம்மா சின்னத்துரை, நாகம்மா குலசேகரம், நேசம்மா திருநாவுக் கரசு, Dr.நேசதாசன் ஆகியோரின் சகோதரியும் சிவகலை (ஆசிரியர், யா/கொடிகாமம் அ.த.க.பாடசாலை), தேவகலை (ஆசிரியர், யா/கொடி காமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்) ஆகியோரின் தாயாரும் சிறீரங் கநாதன், லோகேந்திரன் (கிராம அலுவலர், வெள்ளாம் போக்கட்டி) ஆகியோரின் மாமியும் சிவாக், மிசா, சிவஜா, நிசாந்தன், விசாகன் ஆகியோ ரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2003) வெள்ளிக்கிழமை பி.ப 2மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பலாலி தாழ்வு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
கொடிகாமம். (C29130) (29-13-18-31)

தகவல்:
சு.சிறீரங்கன்

## சமாதானம் நிரந்தரமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் விவசாய நிலங்கள், வீடுகள் பலவும் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கின்றன. நாடு நிரந்தர சமாதானத்தைக் கண்டு அங்கு இயல்பு நிலை தோன்ற வேண்டும். நிரந்தர சமாதானமின்றேல் நாடு, அரசியல், பொருளாதாரம், கைத்தொழில்துறைகளில் எதுவித அபிவிருத்தியும் காணமுடியாது - என்றார்.

புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அகதிகள் விவகார அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன கூறியதவாது:-

வன்னி, கிளிநொச்சி, முல்லைத்தீவு முதலான பகுதிகளில் அகதிகளாக மக்கள் பெரும் துன்பப்படுகின்றனர். அந்த அகதிகளின் பிரச்சினையில் கவனம் செலுத்தி, அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் திட்டங்களை இவ்வாண்டுக்குள் அமைச்சு நடைமுறைப்படுத்தும்.

தமிழ் நாட்டில் 111 அகதி முகாமகளில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் உள்ளனர். இவர்களின் நிலையை நேரடியாகச் சென்று கண்டறிந்துள்ளேன். யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் நிறைவுற்றதும் தமிழகத்தில் உள்ள அகதிகள் மீண்டும் இலங்கை திரும்பவே விரும்புகின்றனர்.

## கிண்ணியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் உயர்மட்டம் இது குறித்த முடிவைத் தெரிவிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அதன் பின்னர், கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களில் விடுதலைப் புலிகளின் குழுவினர் இந்த முகாமைப் பார்வையிட்ட பின்னர் முகாமை அகற்ற முடியாதென கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவித்துள்ளதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வன் சார்பாக விடுதலைப் புலிகளின் உறுப்பினர் பவான் இது தொடர்பாகத் தமக்கு அறிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும், கண்காணிப்புக் குழுவின் தீர்மானங்களுக்கு விடுதலைப் புலிகள் இணங்காதது குறித்து ஆராய்வதற்காக மீண்டும் ஒரு தடவை - கண்காணிப்புக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனை நேற்று சந்திப்பதற்கு முயற்சி செய்திருந்தார். எனினும், இந்தச் சந்திப்பிற்கு நேரம் ஒதுக்க முடியாமை காரணமாக இந்தச் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் தெரிவித்தார். கிண்ணியா முகாம் சர்ச்சை தொடர்பான தமது முடிவை எழுத்து மூலம் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு அனுப்பி வைப்பதாகப் புலிகள் தமக்குத் தெரிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-5)

திணைக்கள அதிகாரிகளுக்கும், அரசாங்க அதிபர்களுக்கும் இன்று கையளிக்கப்பட்ட யாழ்ப்பாண திட்டம் 2003 விவரத் திரட்டு நூல், அபிவிருத்திப் பணிகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுமென்பதை தெளிவாக விவரிக்கிறது.- இவ்வாறு கூறினார்.

## திருமலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாத்திடப்பட்டு 18 மாதங்கள் கடந்த நிலையிலும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாமையைக் கண்டிப்பதும் -

திருகோணமலை மாவட்டத்தில் படையினர் மேற்கொண்டுவரும் சுற்றி வளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதும் -

இந்தக் ஹர்த்தாலின் நோக்கம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். அனைத்துத் தரப்பினரையும் இந்த ஹர்த்தாலை அனுஷ்டிக்கும்படியும் கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இப்படி அவர் கூறினார்.

சபாநாயகர் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவே கவலைப்படாதபோது எதிர்க்கட்சியினர் முதலைக்கண்ணீர் வடிப்பதேன்? தேவையானால் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன இச்சபையில் சிறப்புரிமை மீறல் பிரேரணையொன்றைக் கொண்டுவரலாம். இப்படி அவர் கூறினார். (ம-5-6)

## வெளிநாட்டு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதிப்படை ஒன்றை நாட்டுக்குள் அழைக்கும் சூழல் ஒன்றை ஏற்படுத்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் நோர்வேயும் ஆரம்பித்து இருப்பதாகவும் சோமவன்ஸ தெரிவித்துள்ளார்.

இதனைத் தோற்கடிப்பதற்காக தெற்கின் சகல தரப்புக்களும் தமது பேதங்களை மறந்து ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

## மாகாணமட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பித்து வைப்பார். மத்திய கல்லூரியில் நடக்கும் போட்டிகளை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா ஆரம்பித்து வைப்பார். யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடக்கும் போட்டிகளை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரனும், யாழ். திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையில் நடக்கும் போட்டிகளை மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஆனந்தராஜாவும் ஆரம்பித்து வைப்பார்கள்.

## இலங்கை - இந்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமருக்கு ஜெயலலிதா எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

**கச்சதீவு வேண்டும்**

தமிழக மீனவர்கள் குறிப்பாக இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சென்று விட்டு பத்திரமாகத் திரும்ப முடியாத நிலை தற்போது உள்ளது. இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்துவிட்டார்கள் என்று கூறி, தமிழக மீனவர்களை அடிக்கடி இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்றுவிடுகின்றனர்.

கச்சதீவையொட்டிய கடல் பகுதியில்தான் மீன் வளம் நன்றாக உள்ளது. இதனால்தான் அப்பகுதியில் மீன் பிடிக்க தமிழக மீனவர்கள் செல்கிறார்கள். ஆனால், கச்சதீவை இந்திய அரசு இலங்கைக்குத் தாரை வார்த்துவிட்டதால் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க இயலாமல் பெரும் அவதியுற்று வருகின்றனர்.

தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையினராலும், விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் செயற்படும் இலங்கை மீனவர்களினாலும் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டு வருகிறன.

இதைத் தீர்க்க மத்திய அரசு நிரந்தரத் தீர்வைக் காண முயல வேண்டும்.

கச்சதீவை இந்திய அரசு நிரந்தரக் குத்தகைக்கு எடுத்து தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும். பங்களாதேஷுடன் பேசி தீன்பங்காவை குத்தகைக்கு எடுத்தது மாதிரி இதையும் செய்ய வேண்டும். இதன் மூலம் இலங்கையின் இறையாண்மை காக்கப்படுவதோடு, தமிழக மீனவர்களும் பிரச்சினையில்லாமல் கடலில் மீன் பிடிக்க முடியும்.

மேலும், இலங்கை மீனவர்கள் இந்தியக் கடல் எல்லைக்குள் 3 ஆண்டுகள் மீன்பிடித்துக்கொள்ள இந்திய அரசு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

அதேபோல, இலங்கை கடல் எல்லையிலும், நமது மீனவர்கள் மீன்பிடித்துக்கொள்ளும் வகையில் ஒப்பந்தம் செய்யவேண்டும்.

இரு நாட்டு மீனவர்களும் பிடிக்கப்பட்டால், எந்தவித சித்திரவதைக்கும் ஆளாக்கப்படாமல் உடனடியாக விடுதலை செய்துவிடும் வகையில் இலங்கை அரசுடன் மத்திய அரசு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். கச்சதீவு, இராமநாதபுரம், மன்னாரின் ஜமீன்தார் ஆட்சியின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதை இலங்கைக்குத் தாரைவார்த்ததில்தான் பிரச்சினையே ஆரம்பித்தது.

இதை நீங்களே (வாஜ்பாய்) 1974ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பேசியபோது குறிப்பிட்டுள்ளீர்கள். இதனால, கச்சதீவை இந்தியா நிரந்தரக் குத்தகைக்கு எடுக்கவேண்டும்.

- இவ்வாறு தனது கடிதத்தில் ஜெயலலிதா கூறியுள்ளார். (ம)

## இரு வேறு திட்ட வரைபு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தங்கள் அரசினால் அங்கீகரிக்கப்பட்டன. அந்தத் திட்டவரைவே விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிச்சயமாகப் புலிகள் அதனை நிராகரிக்க மாட்டார்கள். புலிகள் தமது மாற்று ஆலோசனைகளை வெகுவிரைவில் சமர்ப்பிப்பார்கள். எனவே, தடைப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என்பது உறுதி எனவும் அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக அமைச்சர் மேலும் கூறியதாவது:-

டோக்கியோ மாநாட்டில் காணப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் ஆலோசனைகளைத் தனியாகவே தயாரித்தது. இந்த ஆலோசனைகள் தொடர்பாக நோர்வேயின் முன்னாள் தூதுவரும் தற்பொழுது சமாதான முன்னெடுப்புக்களுக்கான விசேட தூதுவருமான வெஸ்பேர்க் எம்முடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தினார். அரசின் ஆலோசனைகளில் காணப்படும் சில விடயங்கள் தொடர்பாகச் சந்தேகங்களை எழுப்பி அவற்றுக்கான எமது விளக்கங்களையும் அவர் பெற்றுக்கொண்டார்.

எனினும், அரசின் ஆலோசனைகளோடு நோர்வே அனுசரணையாளர்களின் ஆலோசனைகளையும் இணைத்து மாற்று ஆலோசனைத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்படி கேட்டுக்கொண்டோம். அதன்படி, அரசின் ஆலோசனைகளுடன் தனது அபிபபிராயங்களையும் உள்ளடக்கிய நகல் திட்டத்தை வெஸ்பேர்க் எம்மிடம் சமர்ப்பித்தார். அதை மிகவும் அவதானமாகப் பரிசீலனை செய்த நாம் வெஸ்பேர்க்கின் ஆலோசனைகளை எழுத்திற்கு எழுத்து அங்கீகரித்துள்ளோம். இதே பாணியில்தான் போர் நிறுத்த ஒப்பந்தமும் தயாரிக்கப்பட்டது.

இறுதி வரைவுதான் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. புலிகள் மாற்று யோசனைகளை அனுப்பிய பின்னரே இடைக்கால நிர்வாக சபை தொடர்பான இறுதி நகல் திட்டத்துடன் பேச்சுக்கள் ஆரம்பமாகும்.

புலிகளின் மாற்று ஆலோசனைகள் எமது கைக்கு கிடைக்கும்வரை திட்ட வரைவு தொடர்பான மேலதிக விவரங்களைக் கூறமுடியாது. திருத்தங்கள் செய்யப்பட்ட பிரதி ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதில் அரசுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

- இவ்வாறு அமைச்சர் பீரிஸ் கூறினார். (ம)


# தேவை

## பார ஊர்தி சாரதி

**முன் அனுபவமும் வாகன அனுமதிப் பத்திரமும் உடைய சாரதிகள் தேவை. சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

**விண்ணப்பதாரிகள் கொழும்பு பற்றிய பிரதேச அறிவும், வாகனம் பராமரித்தல், பழுது பார்த்தல் மற்றும் ஆங்கிலம் அல்லது சிங்களத்தில் குறைந்தளவேனும் உரையாடும் திறன் என்பன மேலதிகமாக விரும்பத்தக்க தகைமையாகக் கருதப்படும். விண்ணப்பதாரிகள் உறவினர்கள் அல்லாத இருவரின் சிபார்சுக் கடிதம் மற்றும் சுயவிவரங்களுடன் இன்று காலை 10மணிக்கு நேரில் தொடர்புகொள்ளவும்.**

**மனிதவள முகாமையாளர்,**
**உதயன் மனிதவள சேவை,**
361, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

(C/29128) (12-18-31)



# தேவை

## ஓவ் செற் மெசின் மைண்டர்கள்

**திருகோணமலையில் கடமையாற்றக் கூடிய**
**சிறிய ஓவ் செற் மெசின் மைண்டர்கள் தேவை.**

- இவர்கள் முன்அனுபவமுள்ளவர்களாகவும், தங்கியிருந்தே பணியாற்றக்கூடியவர்களாகவும் இருத்தல்வேண்டும்.
- தங்குமிட வசதி ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

*இன்று 25. 07. 2003 வெள்ளிக்கிழமை காலை 10. 00 மணிக்கு உதயன் பணிமனைக்கு சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரவும்.*

**மனித வள முகாமையாளர்,**
**உதயன் மனிதவள சேவை,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C-29117) (12-18-31)



# Institute of Professional Accounting Studies

IPAS

aat - stage II
ஆரம்பம் : 26.07.2003.
Chartered Accountancy - Intermediate
ஆரம்பம் : 02.08.2003

விரிவுரைகள் தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களினாலும், பட்டயக் கணக்காளரினாலும் (chartered Accountant) நடத்தப்படும்.

aat - stage I, chartered Accountancy-foundation, CIMA (U.K.) - foundation ஆகிய கற்கை நெறிகளின் இரண்டாம் பிரிவுக்கான அனுமதிகள் 03.08.2003 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

வேலதிக விவரங்களுக்கு : தொலைபேசி : 0777-563292,
199, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 0777-563294 (29126)(31-12-18)



# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் கணேசராசா

**(முன்னாள் மாகோ வர்த்தகரும், புலோலி மந்திகை கணேஸ் களஞ்சியம், அகிலாஸ் பான்ஸி பலஸ், மந்திகை - உரிமையாளரும் முன்னாள் புலோலி வணிகர் கழகத் தலைவரும்)**

புலோலி தெற்கு, புலோலி, புற்றளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கணேசராசா (KVG) அவர்கள் நேற்று (24.07.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும் சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நவரத்தினம், காலஞ்சென்ற செல்லம்மா, சரஸ்வதி, மங்கையர்க்கரசி (கனடா), பெரியதம்பி (ராஜா கிறைண்டிங்மில், மாகோ) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெகதா (கனடா), அகிலா (கொழும்பு), பாலபவான் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மாதவன் (கனடா), சதீஸ் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.07.2003) வியாழக்கிழமை பி.ப. 5 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கணேஸ்புரி,*
*புற்றளை, புலோலி.*

தகவல்:
பாலபவான் (மகன்).

(C/29123) (29-12-18)







இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.